நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை

தோற்றம் 14.09.1901

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி - 111 | பகுதி - 1 | விலை ரூ. 10

திருவள்ளுவர் ஆண்டு - 2047 | ஜனவரி - 2017




நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

# நான்காம் தமிழ்ச் சங்க ஆட்சிக்குழு

| | | |
|---|---|
| முகவை மன்னர் **நா.குமரன்சேதுபதி** | தலைவர் |
| மருத்துவர் **ந.சேதுராமன்** | துணைத் தலைவர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | செயலாளர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | உறுப்பினர் |
| முதுமுனைவர் **இரா.இளங்குமரனார்** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **கே.ஆர்.என்.கருணாகரன்** | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | உறுப்பினர் |
| திரு. **துரை கருணாநிதி** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |

# செந்தமிழ் கலை மற்றும் கீழ்திசைக் கல்லூரி

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| வழக்குரைஞர் **ச.தசரதராமன்** | தலைவர் |
| திருமதி. **இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி** | செயலாளர் |
| வழக்குரைஞர் **ச.மாரியப்பமுரளி** | உறுப்பினர் |
| பொறிஞர் **க.சி.அகமுடைநம்பி** | உறுப்பினர் |
| திரு. **இரா.சண்முகசுந்தரம்** I.R.S (ஓய்வு) | உறுப்பினர் |
| திரு. **அழ.சித்தையா** | உறுப்பினர் |
| திரு. **வி.சத்யநாராயணன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **து.மாயராசன்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **சு.சிவசாமி** | உறுப்பினர் |
| பொறிஞர் **லெ.சிவக்குமார்** | உறுப்பினர் |
| வழக்குரைஞர் **ஆர்.பாலாஜி** | உறுப்பினர் |
| திரு. **ஜெ.பாலதண்டாயுதம்** | உறுப்பினர் |
| முனைவர். **க.பாலகிருஷ்ணன்** பல்கலைக்கழக நியமன | உறுப்பினர் |
| முனைவர். **சு.விஜயன்** முதல்வர் (பொ) | உறுப்பினர் |
| முனைவர். **கி.வேணுகா** துணை முதல்வர் | உறுப்பினர் |
| முனைவர். **பா.நேருஜி** உதவிப்பேராசிரியர் | உறுப்பினர் |

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1. | இதழ் மணம் | 4 |
| 2. | தனககுவமை இல்லாத் தனிப்பெரு நூல்-(7)<br>முதுமுனைவர் இரா.இளங்குமரனார் | 6 |
| 3. | புறநானூறு : மூலததொகுபபின் சிறப்பு<br>பேராசிரியர். ப.மருதநாயகம் (செனற இதழின தொடாசசி) | 9 |
| 4. | உருவகம்<br>முனைவா. செ.வை. சண்முகம் | 15 |
| 5. | சொற்களின் தோற்றமும் மறைவும்<br>பேராசிரியர். பழனி அரங்கசாமி | 23 |
| 6. | கம்பனில் போர்<br>முனைவர். உ.கருப்பத்தேவன் (செனற இதழின தொடாசசி) | 34 |
| 7. | சங்கச் செய்திகள் | 40 |

வலைதளம் : www maduraitamilsangam.com
: www.senthamilcollege
மின்னஞ்சல் : maduraitamilsangam@yahoo.co.in
: principalsenthamilcollege@yahoo co.in

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கடடணம் | ரூ. 200 | ரூ. 1,000 |
| ஆயுள கடடணம் | ரூ. 2,000 | ரூ. 10,000 |
| புரவலர் கட்டணம | ரூ. 10,000 | ரூ. 20,000 |
| தனி இதழக்கட்டணம் | ரூ. 10 | |

கலங்கரை விளக்கம் கிழியாஞ்சுட்டியாகியது போல தமிழ் இலக்கணம் உரை நடையில் போற்றப்படாது ஒளி குன்றியது. கலங்கரை விளக்கம் போன்ற தொல்காப்பிய இலக்கணம் கண்ட தமிழ் இக்காலத்தில் இலக்கண வழுவுடன் பல்வேறு நாளேடுகளில் நாளும் வந்து கொண்டிருக்கிறது. தமிழ்த் தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்குச் சோதிடர் பேச்சை நம்பி தமிழ் உச்சரிப்பு இல்லாத வெற்று ஒலியைப் பெயராகச் சூட்டுகின்றனர். குடிப்பெயர் விளங்கத் தம் குழந்தைகளுக்குத் தமிழில் பெயர் சூட்டுதல் பெற்றோர் கடன். அதுவே வழி வழி வந்த குடிச் சிறப்பை நிலை நாட்டும்.

தமிழ் மக்கள் தடம்புரண்டு போவதை உணர்ந்த அறிஞர் இளங்குமரனார் தமிழ்க்காப்பு நடவடிக்கையாகக் கீழ் வரும் வேண்டுகோளை முன் வைக்கிறார். தமிழகம் சிந்திப்பதாக:

"தக்கோர் குழுவமைத்து உரைநடை அமைப்பிலேனும் தொல்காப்பிய வழியில் விடுபாடுகளை இணைத்துத் தனித் தமிழ் இலக்கண நூல் அமைத்தல் நன்று. தமிழ்ச் சான்றோர்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ் வளர்ச்சித் துறை, செம்மொழி நிறுவனம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை திட்டமிட்டுச் செய்ய வேண்டிய பணி இதுவாம்".

செந்தமிழ் வாயிலாக அறிஞர் இளங்குமரனார் வேண்டுகோள் விடுத்திருப்பது மகிழ்ச்சி தருகிறது. அறிஞர் அனைவரும் ஒன்றுபட்டு இத்திட்டத்தைச் செயல்படுத்த முனைந்திடுவீர் என வேண்டுகின்றோம்.

பேராசிரியர் செ.வை.சண்முகம் "உருவகம்" என்னும் தலைப்பில் தொல்காப்பியம் உவமையியலை ஆய்வு செய்கிறார். தொல்காப்பிய உரை ஆசிரியர்கள், பேராசிரியர் தமிழண்ணல் ஆகியோர் முறையே ஆய்வு மேற்கொண்டதை ஆசிரியர் எடுத்துரைத்துப் பின்பு தன் ஆய்வை எடுத்துரைக்கிறார். தொல்காப்பியர் உவமையியலை கட்டமைத்துள்ள

நெறியினை ஆசிரியர் எடுத்துரைக்கும் நுட்பம் புதிய புலப்பாடு, பேராசிரியர் செ.வை. சண்முகம் மொழியின் சொற்பொருள் சார்ந்த ஆய்வியலில் ஆழ்ந்த புலமையுடையவர். மொழி இலக்கண உத்தியைப் பயன்படுத்தி இலக்கியங்களில் மூலநூல் ஆசிரியனை அறிவியல் உளவியல் நோக்கில் வெளிக் கொணரும் ஆய்வு முறை மேலை இலக்கிய ஆய்வில் மேற்கொள்ளப்படுகிறது. பேராசிரியர் செ.வை.சண்முகம் உலகம் தழுவிய கல்விப் புலங்களோடு நெருங்கிய தொடர்புடையவர். தொல்காப்பியம் உலகம் தழுவிய அறிவியல் உளவியல் கோட்பாடுகளை தன்னுள் பொதிந்து வைத்திருப்பதைக் கட்டுரை ஆசிரியர் காண்கிறார். காட்சி அவரைத் தொல்காப்பியத்தைக் காதலிக்கச் செய்கிறது. தொல்காப்பிய இன்பத்தில் தோய்கிறார். தோய்வும் புலமையும் இலக்கிய இன்பமாக வெளிப்படுகிறது. "உருவகம்" அன்பின் வெளிப்பாடு. கற்று இன்புறுக.

"புறநானூறு மூலத்தொகுப்பின் சிறப்பு" என்னும் தொடர் இந்த இதழில் தொடர்கிறது. "பொருள், இடம், காலம், தொழில் ஆகியவற்றில் பல பாட்டு ஒருங்கு தொக்கது தொகை என்றும், பொருளால் தொக்கது புறநானூறு" அது காப்பியம் என்றும் உரைக்கும் இலக்கணம். இப்பகுதி கோப்பெருஞ்சோழன், பாரிவள்ளல் இருவருடைய வரலாற்றைக் காப்பியமாகத் தொகைப்படுத்தி இருப்பதை ஆசிரியர் எடுத்துரைக்கும் திறம் கற்று இன்புறத்தக்கது. புறநானூறு தொகைநூல் அல்ல; அது பண்டைத் தமிழர் வரலாற்றுக் காப்பியம் என்பதை இலக்கணம் உரைப்பதற்கு ஏற்ப ஆசிரியர் உணர்த்தும் நெறி உற்று நோக்கத்தக்கது.

"சொற்களின் தோற்றமும் மறைவும்" என்னும் தலைப்பில் பேராசிரியர் பழனி அரங்கசாமி அவர்களின் கட்டுரை இடம் பெறுகிறது. இக்கட்டுரை தமிழ் மொழியில் சொற்களின் பிறப்பையும் மாற்றத்தையும் சுட்டி அதற்குரிய வரலாற்றை எடுத்துரைக்கிறது. காலங்காலமாக தமிழ்மொழிக்கு ஏற்பட்ட சோதனையையும் அதனை மீட்டு எடுக்க நடந்த மொழி வரலாற்றையும் கட்டுரை ஆசிரியர் கல்வியாளர் சிந்தனைக்கு எடுத்துரைக்கிறார். செய்தியின் தொகுப்பும் படைப்பும் ஆசிரியர் மாணவர் சிந்தனைக்குரியது.

++++++

# தனக்குவமை இல்லாத் தனிப் பெருநூல்

7

முதுமுனைவர். **இரா.இளங்குமரனார்**

*கார்த்திகை விளக்காகத்* துணித்திரிஇட்டு, சிறு *சிட்டிகளில்* எண்ணெய் விட்டு வரிசையாக வைத்த வழக்கு தொன்மையானது. கோயில்களில் கற்றூண் நிறுத்தி அத்தூணில் குழிதோண்டி எண்ணெய் விட்டுப் பெரிய திரியிட்டு விளக்கேற்றியது *குற்றிவிளக்கு* எனப்பட்டது. அதுவே, மக்கள் வழக்கில் *குத்துவிளக்கு* எனப்பட்டு வீடுகளிலும் விழாக்களிலும் ஒளியேற்ற வழியாயது. அதன் பின்னர் *மண்ணெண்ணெய்* விளக்கு, *ஆவி* விளக்கு, *மின்* விளக்கு என வளர்ச்சியுற்றது.

மிகப் பழைய நாளிலேயே *'நாவாய்'* ஆகிய கப்பல்கள் உலக வலம் வரக் கண்டது தமிழகம்! கடற்படைக்கும், பண்டங்கள் விற்கவும் வாங்கவும் கப்பல்கள் பயன்பட்டன. அந்நாவாயே வடமொழியில் *'நௌ'* என்பதற்கும், ஆங்கிலத்தில் *'நேவி'* என்பதற்கும் மூலம் ஆகும். ஏனெனில், ஆரியர்கள் வாழ்ந்து இங்கு வந்தது கடல் சார்பு இல்லாத நாடு ஆங்கிலச் செழுமை கி.பி.16 ஆம் நூற்றாண்டுதொட்டு ஏற்பட்டது. தமிழிலோ மிகப் பழமை தொட்டே *'வளிதொழிலாண்ட'* பெருமையும், பிறநாடுகளுக்குச் சென்று வணிகம் புரிந்த *'பரதவர் மலிந்த பயங்கெழு'* வழக்கும், கலங்கரை விளக்கும் இருந்தன. கப்பல் வகை கட்டுமரம் முதல் *இருபத்தைந்து சொற்கள் உள.*

யானை இல்லாத நாட்டில் யானைப் பெயர்கள் இரா. இருப்பினும் ஒன்றிரண்டே இருக்கும் நம் நாட்டில் யானைகள் பெருக வாழ்ந்ததால்,

***"ஏழைந்துக்கு மேல் இரண்டு உயர்ந்த யானை"*** (37)

எனச் சூடாமணி நிகண்டு கூறியது மேலும் உண்டு.

தமிழில் வளமார்ந்த *தொல்காப்பியம் கலங்கரை விளக்கம் போன்றது.* அதன்பின் ஒப்பவோ உயரவோ ஒரு நூல் தோன்றாமல், படிப்படியே பிரிவுகளைப் பெருக்கினாலும், அவை அனைத்தும் கூடினும் தொல்காப்பியத்தை ஒட்டவில்லை! தொல்காப்பியத்திற்குப் பின் குணவீரபண்டிதர் என்பவரால், *நேமிநாதம்* இயற்றப்பட்டது. அதற்குப் பெயர் *இன்னூல்* என்பது.

அதன் பின் பவணந்தி முனிவரால் நன்னூல் இயற்றப்பட்டது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்தும் தர எண்ணி, முன்னிரண்டோடே நிறைவுற்றது. தொல்காப்பியத்தில் கூறப்படாத சிலவற்றைக் கூறினாலும் மறுதலைப்படச் செய்ததில் மொழிக்கேடும் உண்டாக வழிகாட்டி ஆயிற்று.

*பிரயோக விவேகம், வீரசோழியம்* என்பவை தமிழுக்கும் வடமொழிக்கும் இணைப்புக் காட்டித் தமிழின் தனித் தன்மையையும் முதன்மையையும் குறைத்தன.

*இறையனார் அகப்பொருள், நம்பி அகப்பொருள்* அகப்பொருள் பற்றியவையே. *புறப்பொருள் வெண்பா மாலை* புறப்பொருள் மட்டும் கூறுவது. அதிலும் தொல்காப்பியத்தொடு முரணிய செய்திகள் உண்டு. *தொன்னூல், தென்னூல், இன்னூல்* என்பனவும் தொல்காப்பியம் போல் முழுமையவாய் அமையவில்லை. *இலக்கண விளக்கம்,* பல நூல்களின் திரட்டும் கூட்டலும் குறைத்தலும் மாற்றலும் உடையது.

*முத்துவீரியம்*, நன்னூலினும் வடமொழிப் பெருக்கும் நிறைவும் தராதது. *காக்கை பாடினியம், சிறுகாக்கை பாடினியம், பனம்பாரம், அவிநயம், இந்திர காளியம்* முதலாயவை யாப்பு மட்டுமே உடையவை. அவையும் முழுதுறக் கிடைத்தில. *தண்டியலங்காரம், மாறனலங்காரம்* ஆயவை அணியே கூறுவன. பெரிதும் வடமொழித்தழுவல், சித்திரகவி என மொழிவளம் சுருக்கியவையும் ஆம் எனத் தக்கவை. ஆக்கம் உண்டாயினும் ஆக்கக் கேடுகள் தாமே வயப்படுத்தவல்லன.

*மாறன் அகப்பொருள்*, கோவை நோக்குடையது.

*களவியல் காரிகை* முதலும் முடிவும் இல்லாதது. இலக்கண இலக்கிய விரிவைத் தெளிவிப்பது.

*இலக்கண வினாவிடை*—இலக்கணம் மாணவர் எளிமையாய்க் கற்க உதவுவது. *அணியிலக்கணம், யாப்பிலக்கணம், தொடையதிகாரம், யாப்பதிகாரம்* இன்னவை குறித்த விளக்கங்களை உடையது. *விருத்தப்பாவினம்* ஒருபாவினம் பற்றியது.

பேரளவிலும் சிற்றளவினும் *இலக்கண அகராதிகள்* வந்துள. தொல்காப்பியக் கலைக்களஞ்சியம், தொல்காப்பியக் கலைச்சொல் விளக்கம், தொல்காப்பிய *முதற்சூத்திரவிருத்தி* என்பன தொகையும் எளிமைப்படுத்தும் நோக்கும், மறுப்பும் கொண்டவை.

தொல்காப்பிய உரைகள் *இளம்பூரணம்* முழுமை கொண்டது. *நச்சினார்க்கினியம்* பின்னான்கு இயல்கள் இல்லாதது. செய்யுளியல் உரை ஒன்றும் அவர் பெயரால் வெளிவந்தது. பின்னான்கு இயல்களுக்குப் *பேராசிரியம்* சிறந்த உரை உடையது. *சேனாவரையர், கல்லாடர், தெய்வச் சிலையார்* என்பார் சொல்லதிகார உரையாளர்.

மாணவர்க்குப் பயன்படற்கு என்றே வினா—விடை, எளிய உரை, புத்துரை எனச் சில வெளிவந்துள.

*பேரகத்தியம்* என்பது ஒரு புரட்டு நூல், அது முத்து வீரியத்திற்குப் பின்னர் வந்தது. அவ்வளவு வடமொழிக் கலப்புடையது.

தமிழைக் கெடுக்கவென்றே செய்த நூல் *இலக்கணக்கொத்து.* ஈசான தேசிகர் என்பவரால் செய்யப்பட்டது!

*"ஐந்தெழுத்தால் ஒரு பாடை என அறையவே நாணுவர்*
*அறிவுடையோர் யானும் அதுவே"*

என்ற பிறவி அது!

*"ஒரு நூலாயினும் தனித் தமிழ் உண்டோ?"*

என்று வினவியதும் அப்பிறவி!

பாம்பன் குருபாத தாசர் *'சேந்தன் செந்தமிழ்'* என்றொரு தனித்தமிழ் நூல் செய்யவும், மறைமலைகள் *'தனித்தமிழ் இயக்கம்'* காணவும் தூண்டிய தூண்டல் இம்மறுதலை எள்ளுதல் வினாவே! அவர் தெய்வமொழி என்னும் வடமொழியிலோ, வெள்ளையரிலும் கொள்ளையராய்ப் பரப்பும் ஆங்கில மொழியிலோ,

'*தமிழ்*' '*தமிழ்* மொழி' '*அமிழ்து*' முதலாக எழுதும் சொற்களை எழுத எழுத்துண்டோ?

***"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ***
***னற்றா டொழாஅ ரெனின்"***

என்பதில் பின்னடியில் உள்ளதை அப்படியே *வடமொழியில் எழுத எழுத்து ஒன்றுதானும் உண்டா?*

தொல்காப்பியத் திறமும் தமிழ் ஆரிய மொழிப் புலமையும் ஒருங்கே கொண்டது இத் தமிழ்க்கேடு செய்தற்காகவே தானா?

*ஆறாம் இலக்கணம், ஏழாம் இலக்கணம்* என்பவை வெளிப்பட்டன. எழுத்துகளுக்கு வடிவமும் புலமை நலமும் கொண்டவை.

*பாட்டியல் நூல்கள்* பன்னிரு பாட்டியல் முதலாக இலக்கண விளக்கப் பாட்டியல் ஈறாக நூல்கள் பல எய்தின.

மக்களை வண்ணம் பிரித்த கொடுமையினும், கொடுமை செய்வன அவை. எழுத்துகளுக்குச் சாதி; அமுத எழுத்து, நச்சு எழுத்து, அலி எழுத்து, இன்ன சாதியார்க்கு இப்பாடல், சோதிடர் மொழி கெடுக்க முன்னோடி அது. அதில் சிற்றிலக்கிய வகைகள் பலவற்றுக்கு இலக்கணம் இருத்தல், பாராட்டுக்குரியது. அது மட்டும் இல்லை எனின், *"பாட்டியல் கேட்டியல்"* என்பது தெளிந்த முடிபாம்.

ஆழ்வார் பாடல்கள் அருமை அமைந்தவை. அவற்றுக்கு இடைக் காலத்தே எழுந்த *மணிப்பிரவாள* (மணிப்பவழ) நடையின் உரை தமிழ்க்கு வாய்த்த ஒப்பிலாக்கேடாம்.

நாலாயிரம் பாடல்களில் ஓரிடத்துத் தானும் *அரங்கம், திருவரங்கம்* என்பதை அன்றிக் கிரந்த எழுத்து இல்லை என்பதும் அவ்வெழுத்து இல்லாமல் திருவரங்கப் பேரைக் காண்பது அரிதானது,

***"சொல்லடி மாமி வல்லடி வழக்கு"***

என்னும் வழக்குப் போல்வதாம்!

அறிவியல் முறை வளர்முறை! தமிழ் இலக்கணமோ *தொல்காப்பியம் முதல் தேய்பிறையென இறக்கமாயது!* ஆதலால்,

*கலங்கரை விளக்கம் கிழியஞ்சட்டியாகிப் போன நிலை தமிழ் இலக்கண நிலையாயிற்று!*

தக்கதோர் குழுவமைத்து, உரைநடை அமைப்பிலேனும் தொல்காப்பிய வழியில் விடுபாடுகளை இணைத்துத் தனித் தமிழ் இலக்கண நூல் அமைத்தல் நன்று. *தமிழ்ச் சான்றோர்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத் தமிழ்ச் சங்கம், தமிழ் வளர்ச்சித்துறை, செம்மொழி நிறுவனம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்* ஆகியவை திட்டமிட்டுச் செய்ய வேண்டிய பணி இதுவாம்.

# புறநானூறு : மூலத்தொகுப்பின் சிறப்பு

பேராசிரியர். **ப.மருதநாயகம்,** டி.லிட்.,
செம்மொழி ஆய்வு அறிஞர்,
நடுவண் அரசு நிறுவனம், தரமணி,
சென்னை–600 113
தொலைபேசி : 91944 2787727

*சென்ற இதழின் தொடர்ச்சி :* IV

கோப்பெருஞ்சோழன் என்னும் வரலாற்றுப் பாத்திரம் தொடர்பான நிகழ்வுகளை நினைவு கூரும் பாடல்கள் பல புறநானூற்றில் இடம் பெறுகின்றன இவனே கவிபாடும் ஆற்றல் மிக்கவன்; மனித வாழ்வு பற்றிய அரிய சிந்தனைகளை முன் வைத்தவன்; பிசிராந்தையார் என்னும் புலவர் பெருமானைப் பார்த்திராமலேயே அவர்பால் நட்புக் கொண்டிருந்தவன். *"புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும்"* என்னும் குறள் கூறும் இலக்கணத்திற்கு இலக்கியமாகத் திகழ்ந்தவர்கள் இம் மன்னனும் புலவரும். அச்சோழன் தனது புதல்வரோடு போரிட நேர்ந்ததும், புலவர்களால் தடுக்கப்பட்டு, மனம் நொந்து வடக்கிருந்து உயிர் நீத்ததும், அவனோடு வடக்கிருந்து உயிர் நீப்பதற்குப் பல புலவர்கள் முன் வந்ததும் வரலாற்று நிகழ்ச்சிகள். இவையெல்லாம் மூலத்தொகுப்பில் வரிசையாக இடம்பெறும் 212 முதல் 223 வரையிலான பாடல்களில் சொல்லப்படுகின்றன.

இந்த வரிசையில் முதலாவதாக உள்ள பிசிராந்தையாரின் பாடல் கோப்பெருஞ்சோழன் யாரென்று அறிமுகம் செய்வது போன்று உள்ளது.

*உம்முடைய தலைவன் யாரென்று கேட்பீரானால் எம்முடைய தலைவன் வளம் மிகுந்த வருவாய் மிக்க சோழ நாட்டு மன்னன்; பாணரின் பசிக்குப் பகையானவன்; பொத்தியென்னும் புலவனோடு நட்புக்கொண்டு உறையூரில் மகிழ்ச்சியோடு வாழ்பவன்.* (212)

அடுத்து வரும் பாடலில் புல்லாற்றூர் எயிற்றியனார் தன் மக்கள் மேல் படையெடுத்துச் சென்ற கோப்பெருஞ்சோழனுக்குப் போரைத் தவிர்க்குமாறு அறிவுரை கூறுகின்றார்.

*உன்னோடு போர்புரிய வந்துள்ளோர் உனக்குப்பகை வேந்தர் அல்லர்; அவர்கள் நினைப்பதுபோல் நீ அவர்களுக்குப் பகைவன் அல்லன். நீ இறப்பாயானால் உனது நாடு அவர்கள் ஆட்சியின் கீழ்வரும். அவர்கள் தோற்றால் உனது செல்வத்தை யாருக்குத் தருவாய்? நீ அவர்களிடம் தோற்றால் உன்னுடைய பகைவர் மகிழ்வர்; மகனிடம் தோற்றான் என்ற பழிச் சொல்லே மிகும். போரை ஒழித்து நற்செயல்களைச் செய்வாயாக!* (213)

அடுத்து வருவது கோப்பெருஞ்சோழனுடைய பாடல். உலகில் மாந்தர் வாழ்வு பற்றிய அவனுடைய அரிய எண்ணங்களை அழகுறச் சொல்வது.

*அறிவுத் தெளிவு இல்லாதவர்கள் நல்ல செயல்களைச் செய்வோமா, அவற்றால் பயனுண்டா, இல்லையா என்ற ஐயத்தோடு எப்போதும் இருப்பர். யானை வேட்டைக்குச் செல்வோன் யானையை எளிதில் பெறுதல் கூடும்; பறவை வேட்டைக்குச் செல்வோன் அதனைப் பெற முடியாமல் திரும்பலாம்; நற்செயல்புரிவோர் இறப்பிற்குப் பின் வானுலகில் இன்பம் துய்க்கலாம்; அவ்வின்பம் இல்லையாயின் மாறிப் பிறத்தல் நிகழலாம்; அஃதின்றேல் தமது புகழை இங்கே நிலைநாட்டி விட்டு மாண்டு போகலாம். இவ்வாறு நற்செயல் செய்து புகழ் அடைவதே தலையாயது.* **(214)**

அடுத்த பாடலில் கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும் காட்சி இடம் பெறுகிறது.

*என்னைக் காணாது நட்புக் கொண்டவனாதலால் இப்பொழுது வரமாட்டான் என்று எண்ணாதீர். என் பெயரைத் தனது பெயராகச் சொல்லும் அவன் உறுதியாக வருவான். அவனுக்கு இடம் ஒழித்து வையுங்கள்.* **(216)**

வடக்கிருந்த சோழ மன்னனைக் காண, அவன் சொன்னவாறு பிசிராந்தையார் வந்தது கண்டு, பொத்தியார் வியந்து பாடியது அடுத்த பாடல்.

*பிசிராந்தை வருவானென்று துணிந்து சொல்லிய வேந்தனது பெருமையும், அவன் சொற்படி வந்தவனது அறிவும் வியந்து வியந்து பாராட்டத்தக்கன. அப்பெரியோனை இழந்த இவ்வுலகம் என்னாகுமோ?* **(217)**

வடக்கிருந்தவனைக் கண்ணகனார் என்ற பெருமகனார் பாடியது அடுத்த பாடல்.

*பொன்னும் பவளமும் முத்தும் மணியும் வெவ்வேறிடத்தவை ஆயினும் நல்ல அணிகலனில் ஒன்றாகத் தோன்றுவது போல் சான்றோர் சான்றோரோடு இணைவர். சால்பு அற்றோர் சால்பு அற்றோரைச் சார்வர்.* **(218)**

கருவூர்ப்பெருஞ்சதுக்கத்துப் பூதநாதனார் வடக்கிருந்தவனைப் போற்றுகிறார் அடுத்த பாடலில்.

*நாற்புறமும் நீரால் சூழப்பட்ட நிலப்பகுதியில் மரத்தின் நிழலிலிருந்து உடலை வாட்டும் வீரனே, உன் கருத்திற்கேற்ப உன்னோடு வடக்கிருந்தோர் பலர்; நான் அப்பேற்றினைப் பெற்றிலேன்.* **(219)**

அடுத்துவரும் நான்கு பாடல்களும் பொத்தியார் பாடியவை. அவன் இறந்த பின் உறையூர் மீண்டும் வந்த பொத்தியார் வருந்திப் பாடுகிறார்.

*சோழன் இல்லாத ஊரின் மன்றத்தைக் கண்டபோது*
*களிற்றை இழந்த பாகனைப் போல் கலங்கினேன்.* (220)

அடுத்த பாடலில் அவனது நடுகல்லைக் கண்டு, கூற்றத்தைச் சாடுகிறார்.

*பாணர்க்கும் கூத்தர்க்கும் பரிசில்கள் தந்தவன்; அறநெறி*
*தவறாத செங்கோலினன், வாய்மொழிப் புலவீர்! அவனைக்*
*கொன்ற கூற்றுவனை வைவோம், வாரீர்.* (221)

அடுத்த பாடலில் "என்னை வரச் சொன்னாயே, எனது இடம் எங்கே?" என்று கேட்கிறார்.

*உன் மனைவிக்குப் புகழமைந்த புதல்வன் பிறந்தபின் வா*
*என்று சொன்னாயே! நான் திரும்பிச் செல்ல நேர்ந்ததே!*
*அன்பில்லாதவனே! எனக்கு நீ குறித்த இடம் யாது?* (222)

இறுதிப் பாடலில் "உண்மை நட்புடையார் கல்லாகியும் இடம் கொடுப்பர்" என்று சொல்லி வருந்துகிறார்.

*உடலோடு இனிய உயிர் விரும்புமாறு உரிமையுடைய*
*நட்புடையோர் வடக்கிருந்து உயிர்நீத்து நடு கல்லாகிய*
*பின்னும் தம்முடைய அன்பர்க்கு இடம் அளிப்பர்.* (223)

இத்தகைய நெஞ்சை உருக்கும் உண்மை நிகழ்ச்சிகளைச் சொல்லும் பாடல்கள் இவ்வரிசையில் இல்லாமல் திணை, துறை அடிப்படையில் வைக்கப்படுமானால் மூலைக்கு ஒன்றாகி 232, 29, 376, 222, 223, 351, 331, 342, 352, 353, 354, 355 என்ற எண்களைப் பெறும் நடந்த நிகழ்ச்சிகளைக் கோவையாகச் சொல்ல முடியாத, காண முடியாத நிலையேற்படும். மூலத்தொகுப்பில் உள்ள வரிசையை மேற்கொண்டால் இவை தொடர் நாடகக் காட்சிகளாக விரியக் காணலாம்.

## V

வண்மைக்கு மறுபெயராகிய பாரியும் சங்கச் சான்றோர்களில் சிறப்பிடத்திற்குரிய கபிலரும் ஒருவர்பால் ஒருவர் கொண்டிருந்த அன்பு வள்ளலுக்கும் இரவலர்க்கும், புரவலர்க்கும் இருக்கக் கூடிய உறவிற்குப் பல படிகள் மேலானது. அப்புலவர் பாரியின் வள்ளல் தன்மையைப் போற்றுவதும், அவனுடைய பகைவர்களான மூவேந்தர்களுக்கு அறை கூவல் விடுவதும், அவன் வஞ்சனையால் கொல்லப்பட்டபின் இரங்கி அழுவதும், அவனது நாடடைந்த நிலை கண்டு நெஞ்சம் நோவதும், அவன் மகளிர்க்குக் கணவரைத் தேடி அலைவதும், பல சீரூர் மன்னர்களை வேண்டுவதும் அருமையான பாடல்களாக அழகிய வரிசையில் மூலப் பதிப்பில் இடம் பெறுகின்றன.

முதல் பாடலில் அவனது வண்மையோடு நாட்டுவளமும் இணைத்துப் பேசப்படுகிறது.

*வாள்நுதல் விறலியே, நெடிய மலையினின்று வீழும் அருவியின் நீரினும் இனிமை மிக்க வேள்பாரியிடம் செல்வர்யானால் நல்ல அணிகலன்களைப் பெறலாம்.* (105)

அடுத்த பாடலில் அவன் தெய்வங்களோடு ஒப்பிட்டுப் புகழப்பெறுகிறான்.

*ஒருவன் எருக்கம் பூக்களால் பூசை செய்தாலும் தெய்வங்கள் அவற்றை ஏற்றுக்கொள்ளும். அறிவற்றவரும் பண்பில்லாதோரும் சென்றாலும் அவர்களுக்கு ஈவதைப் பாரி தனது கடமையாகக் கொண்டவன்.* (106)

வள்ளல்களுக்குக் கைம்மாறு கருதாது உலகினைப் புரக்கும் மழையை உவமையாகச் சொல்வது மரபு. கபிலர் அதனைப் புதிய முறையில் பயன்படுத்துகிறார் ஒரு பாடலில்.

*பாரி, பாரி யென்று ஒருவனையே புலவர்கள் போற்றுவர்; உலகைக் காப்பவன் பாரி ஒருவன் மட்டும் அல்லன்; மாரியும் உண்டென்பதை அவர் மறந்தார் போலும்!* (107)

அடுத்த பாடல் பறம்பு நாட்டின் சிறப்பையும் பாரியின் கொடை மடத்தையும் சுருங்கிய சொற்களில் பரக்கப் பேசுகிறது.

*வளம் மிகுந்த பறம்புமலை பாடுவோர்க்குப் பாரியால் கூறு போட்டுக் கொடுக்கப்பட்டுவிட்டது. பரிசிலர் அவனை வேண்டுவாராயின் அவனும் 'வாரேன்' என்று சொல்லாமல் அவரைச் சேருவான்.* (108)

பறம்பு முற்றுகையால் கொள்ளுதற்கு அரிய வளம் கொண்டது என்று கூறுகிறது அடுத்த பாடல்.

*பறம்பு உழவர் உழாது பெறக் கூடிய நான்கு பொருள்களைக் கொண்டது. அவை மூங்கில் நெல்லும், பலாப்பழமும், வள்ளிக் கிழங்கும், மலைத் தேனும் ஆகும். உங்கள் படையாற்றலால் பறம்பைப் பெறுதல் இயலாது. விறலியர் பின்வர நீர் ஆடியும் பாடியும் சென்றால் அதனை இரந்து பெறலாம்.* (109)

இதே கருத்து அடுத்த பாடலிலும் வலியுறுத்தப்படுகின்றது.

*பறம்பு நாட்டின் முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்று விட்டனர். பாரியும் நானும் மட்டுமே எஞ்சியுள்ளோம்; குன்றும் உண்டு. நீங்கள் பாணராய்ப் பாடி வந்தால் இவற்றைப் பெறலாம்.* (110)

அடுத்துவரும் பாடலிலும் இந்த எள்ளல் நிறைந்த நகைச் சுவையே இடம் பெறுகிறது.

*இப்பெரிய குன்றம் வேற்படை கொண்டு செல்வார்க்கு அரியது; பாடிவரும் கிணை மகளுக்கு எளியது.* (111)

பாரி மகளிர் கூற்றாக வரும் அடுத்த பாடல் பாரியின் இறப்பைப் படிப்போர் நெஞ்சைப் பிளக்குமாறு எடுத்துச் சொல்கிறது.

*அன்றைய திங்களின் வெண்ணிலவு வீசிய அன்றைய நாளில் எம்முடைய தந்தையை நாங்கள் உடையேம். எமது குன்றையும் பிறர் கைப்பற்றவில்லை. இன்றைய திங்களின் வெண்ணிலவு வீசும் இன்றைய நாளில் வெற்றி முரசுடைய வேந்தர் எம் குன்றைக் கைப்பற்றிக் கொண்டார்; நாங்கள் எங்கள் தந்தையையும் இழந்தோம்.* (112)

அடுத்த மூன்று பாடல்களில் தாமும் பாரியும் வாழ்ந்த பறம்பு மலையிலிருந்து கபிலர் விடைபெறுகிறார்.

*புகழ் பெற்ற பறம்பு மலையே, உணவையும் மதுவையும் இரவலர் விரும்பியவாறு தந்து மகிழ்விக்கும் வளம் பெற்று எம்முடன் முன்பு நட்புடைய நாடாக இருந்தாய். இப்பொழுது, பாரி இறந்தனனாதலால் அழுத கண்ணீரோடு உன்னைத் தொழுது விடை பெறுகிறோம். வளையணிந்த மகளிரின் கரிய கூந்தலைத் தொடுதற்கு உரியவரைத் தேடிச் செல்கிறோம்.* (113)

*இப்பெண்களின் தந்தையாகிய பாரியின் நாடு பெருவளம் உடையதாக இருந்தது. சனிமீன் புகையினும், எல்லாத் திசைகளிலும் புகை தோன்றினாலும், வெள்ளி தென்திசையில் தோன்றினாலும், வயல்கள் எல்லாம் விளைந்து நிறையும்; பூக்கள் மலரும்; பசுக்கூட்டங்கள் நல்ல புல்லை மேயும்; பாரியின் ஆட்சி செவ்வியதாதலான் அறிஞர் பலராக, மழை தவறாமல் பெய்து கொண்டிருந்தது. ஆனால் இப்போது நிலம் எல்லாம் வறண்டு போய்விட்டது.* (114)

*ஒரு பக்கம் அருவி முழங்க, இன்னொரு பக்கம் கள் வழிந்து ஓடும் மலை பாரியுடையது. அவன் பெருவேந்தர்க்குக் கொடியவனாகவும் எமக்கு இனியவனாகவும் இருந்தான். அப்பறம்பு மலை பிறரால் கைப்பற்றப்பட்டது.* (115)

அடுத்த பாடல் தந்தையை இழந்த பாரி மகளிரின் வறுமை நிலையைக் காட்சிப் படுத்துகிறது.

*இப்பொழுது பாரி மகளிர் சிறிய மனையில் பீர்க்கு முளைத்த சுரை படர்ந்த இடத்தில் குப்பை மீது ஏறி உப்புவணிகர், உப்பை ஏற்றிச் செல்லும் வண்டிகளை எண்ணிக் கொண்டிருக் கின்றனர். பாரி வாழ்ந்த போது இவர்கள் போர் தொடுக்க வந்த மன்னர்களின் குதிரைகளை எண்ணியவர்கள். யான் வருந்துவேன். என் வாழ்நாள் கெடுவதாக!* (116)

அடுத்த பாடலில் பாரிமகளிரைக் கூட்டிச் செல்லும் கபிலர் பறம்பு நோக்கிச் சொல்லிய காட்சி இடம் பெறுகிறது.

*இரவலர்க்குத் தேர் வழங்கிய உயர்ந்தோனது மலை இங்கிருந்து பார்ப்பவர்களுக்கும் தோன்றும்; சிறிது தொலைவில் சென்று நின்று பார்ப்பவர்களுக்கும் தோன்றும்.* (117)

பாரிக்குப் பிறகு அழிந்த பறம்பு நாட்டை அடுத்த பாடல் ஓர் உவமையின் மூலம் படம் பிடித்துக் காட்டும்.

*தெளிந்த நீரை உடைய சிறுகுளம் பாதுகாப்பார் இன்மையால் உடைவது போன்று, பாரியினுடைய குளிர்ந்த பறம்பு நாடு சீரழிந்தது.* (118)

பெருவளம் பெற்றிருந்த பறம்பு நாடு எவ்வாறெல்லாம் கெடுமோ என்று கபிலர் மனம் நொந்து பேசுகிறார் அடுத்த இரண்டு பாடல்களில்,

*நிழலில்லாத நீண்ட வழியில் நின்ற தனி மரத்தைப் போல் இரவலர்க்கு வழங்கும் வள்ளல் தன்மையுடைய பாரியின் நாடு முன்பெல்லாம் மெல்லிய திணையாகிய புதுவருவாயை உடையது, செம்மண்ணால் ஆகிய புற்றின் கண் பெறப்பட்ட ஈசலை இனிய மோரோடு கூட்டிச் சமைக்கப்பட்ட புளிங்கறியை உடையது. இனி அதன் நிலை எவ்வாறு ஆகுமோ?* (119)

வண்மையாலும் வீரத்தாலும் புகழ்பெற்ற பாரியின் நாடு முன்பு வருந்தாது பெறும் புதிய வருவாயினைக் கொண்டதாக இருந்தது.

*செழுமையாக விளைந்த புதியவரகு, திணை, எள், அவரை ஆகியவற்றையெல்லாம் கொண்டு சமைத்த உணவைப் பெரிய தோளையுடைய மனையாள் யாவர்க்கும் வழங்குவாள். இனி அது கெடும் போலும்.* (120)

அடுத்து வரும் நான்கு பாடல்கள் கபிலர் மலையமான் திருமுடிக்காரியைப் பாடியவை ஆகும். பாரி மகளிரை விச்சிக்கோனிடம் அழைத்துச் சென்று பாடியது. இருங்கோவேளிடம் அழைத்துச் சென்று பாடியது, இருங்கோவேள் பாரி மகளிரைக் கொள்ளானாகப் பாடியது என்று வரும் மூன்று பாடல்கள் 200, 201, 202 என்ற எண்களில் இடம் பெறுகின்றன. பாடப்பட்டோர் இல்லாத இரண்டு மகட்பாற் காஞ்சிப் பாடல்கள் 337, 347 என்ற வரிசையில் வைக்கப்பட்டுள்ளன. மூலப்பதிப்பில் 105 முதல் 120 வரையில் தரப்பட்டுள்ள 16 பாடல்கள் பாரி—கபிலர் நட்பை விளக்குவனவாய் உரிய வரிசையில் அமைந்திருப்பது தெளிவு. இவற்றைத் திணை, துறை அடிப்படையில் பிரிப்போமானால் அவை 258, 210, 211, 212, 64, 65, 66, 348, 338, 334, 332, 333, 339, 335, 336, 337 என்ற எண்களைப் பெறும். இரண்டு வரிசைகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால் மூலப்பதிப்பு வரிசையே சிறப்பானது என்பது விளங்கும்.

*தொடர்ச்சி*
*அடுத்த இதழில்*

# உருவகம்

முனைவர் **செ.வை.சண்முகம்**
194, பூங்கா சாலை, மாரியப்பாநகர்,
அண்ணாமலைநகர், சிதம்பரம்–608 002
கைபேசி : 98651 96476

முன்னுரை :

தொல்காப்பியத்தில் எழுத்து, சொல் அதிகாரங்களில் உவமை பற்றிப் பல சூத்திரங்கள் காணப்படுவதோடு, செய்யுளியலுக்கு முன் இயலான உவமவியலில் 37 சூத்திரங்கள் அமைந்துள்ளதால், மொழி அமைப்பில் மாறுபாடு, கருத்து நோக்கு, கருத்தாடல் நோக்கு, கருத்தாடலில் மெய்ப்பாடு இணைவது என்று உவமையியல் தளம் விரிவடைந்துள்ளது

உவமையியல் கருத்துகளைத் தமிழண்ணல் (2003:52) அ) உவமையின் இயல்பு (முதல் 10 சூத்திரங்கள்), ஆ) உவம உருபுகள் (அடுத்த 7 சூத்திரங்கள்), இ) புரிதல் முறை (அடுத்த 5 சூத்திரங்கள்), ஈ) உள்ளுறை (அடுத்த 9 சூத்திரங்கள்), உ) உவமையில் சிறிது வேறுபடுவனவும் அடுக்கி வருவனவும் (அடுத்த 6 சூத்திரங்கள்) என்று ஐந்து வகைப்படுத்தியுள்ளார். ஆனால் சில கருத்துக்கள் இடைவிட்டுப் பேசப்படுவதால், மாற்று வகை கீழே தரப்படுகிறது. எப்படியிருந்தாலும் ஒரு இயலை உள்பாகுபாடு செய்து இதில் விளக்கப்பட்டுள்ள பொருள்களைப் புரிந்து கொள்வது அந்த இயலின் ஒட்டுமொத்தப் பொருளில் பல பரிமாணங்கள் இருப்பது புலனாகும். அந்த முறையில்

1. உவமையின் பொதுக் கோட்பாடு = 3,8,10,19,20,21, (6)
2 உவமையின் தோற்றமும் நிலைக்களனும் = 1, 2,4,5,6 (5)
3. உவம உருபுகள் = 11–18. (8)
4. உவம வகைகள், பொருண்மையியல் நோக்கு=9,23–25,32–35 (8)
5. உவம வகைகள், தொடரியல் நோக்கு = 7, 22, 36, 37 (4)
6. கூற்று = 26–31 (6) என்று ஆறு வகைப்படுத்தலாம்.

பொருண்மையியல் நோக்கு வகைகளாகக் கருதப்படும் 9, 23–25, 32–35 ஆகிய 8 உவமவியல் சூத்திரங்கள் அமைந்துள்ளன. அவைகளில் தொல்காப்பியமே ஒரு வகைக்கு 'உவமப்போலி' என்று பெயர் கொடுத்துள்ளது(24). அது உள்ளுறையாக உரையாசிரியர்களால்

கருதப்படுகிறது. எனவே உருவகம் (9), உள்ளுறை (23–25) கருத்தாடல் பொருண்மை (32–35) என்று மூன்று வகையாக இங்குப் பொதுமைப்படுத்தப்பட்டு முதலில் உருவகம் ஆராய எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

உருவகம் :

*"பொருளே உவமம் செய்தனர் மொழியினும்*
*மருளறு சிறப்பின்அஃது (உ)வமை ஆகும்.* (9)

இதை 'உவமைக்கண் வருவதோர் வேறுபாடு உணர்த்து'வதாக இளம்பூரணரும், 'ஓர் உவமை விகற்பம் கூறுகின்ற'தாகப் பேராசிரியரும் விளக்கியுள்ளார்கள். இருவருமே ரூபகம், உருவகம் என்று அடையாளம் காட்டினாலும், மூல ஆசிரியரின் கருத்தை ஒட்டி உவமையின் ஒரு வகை என்றே விளக்கியுள்ளார்கள்.

*வடிவம் :*

தாமரை முகம்=உவமை. முகத் தாமரை=உருவகம். அதாவது உவமையியல் கலைச்சொல் நோக்கில் உவமானம் (உவமம்), உவமேயம் (பொருள்) என்பவை அடிப்படையானவை. அந்த முறையில் உவமை என்பது உவமானம்+உவமேயம் (தாமரை முகம்) என்றும், உருவகம் என்பது உவமேயம்+உவமானம் (முகத்தாமரை) என்றும் அமைபவை. இதைத்தான் தொல்காப்பியம் 'பொருளே உவமம் செய்தனர் மொழி'தல் என்று பொதுமைப்படுத்தியுள்ளது.

பொருள் :

உவமையில் (தாமரை முகம்) தொடரியல் கருத்துப்படி முதலில் இருப்பது (தாமரை) அடை, அடுத்து இருப்பது *தலைச்சொல்* (முகம்), தலைப்பு. அதன்படி உவமையில் உவமேய கருத்து அழுத்தம் பெறும். ஆனால் 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை' (3) என்று தொல்காப்பியம் கூறியுள்ளதாலும், உளவியல் கருத்துப்படியும் உவமைத் தொடரில் உவமானமே பொருள் அதிகச் சிறப்பு உடையது. ஆனால் அந்தப் பொருள் உவமேயத்தோடு ஒத்தது என்று கூறும்போது உவமேயமும் ஓரளவு சிறப்புப் பெறுகிறது. அதாவது பெரிய பையன் என்று கூறும்போது பெரிய என்ற அடையால் பையன் சிறப்பு கூடுதல் போல், தாமரை போன்ற முகம், தாமரை முகம் என்ற தொடர்களில் முகம் என்ற தலைச்சொல் தாமரையின் சிறப்பைப் பெறுகிறது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

முகத் தாமரை என்ற உருவகத்தில், தொடரியல் நோக்குப்படி முகம்=அடைச்சொல், தாமரை=தலைப்புச் சொல் அதனால் தாமரை முக்கியத்துவம் பெறுகிறது. தொடரியல் நோக்கில் அது உண்மை என்றாலும், கருத்தாடல் நோக்கில் முகமே தலைப்பு. தாமரை விளக்கமே. அதாவது பேசுவோர் கருத்து முகத்தைப் பற்றியதே. அதனால் கருத்தாடல் நோக்குப் பொருள் என்ன என்ற கேள்வி எழுகிறது.

பெரிய பையன் என்பதைப் பையன் பெரியவன் என்றும் கூறலாம். அப்போது பையனின் பெருமை நேடியாகக் கூறப்பட்டதாக ஆகிவிடுகிறது. அதுபோல முகத்தாமரை என்பதில் முகம் தாமரை என்று பொருள்பட்டாலும் உவமைக்கும் உருவகத்துக்கும் பொருள் அழுத்தத்தில் மாறுபாடு உள்ளது குறிப்பிடத்தகுந்தது.

தொல்காப்பியம் உருவகத்தை உவமேயம்+உவமானம் என்ற முறையை விளக்கி, அதன் பொருளை 'மருளறு சிறப்பின் அஃது (உ)வமை ஆகும்' என்று கூறியது உருவகத்தில் (முகத்தாமரை) உவமானத்தின் சிறப்பைப் பெற்றுவிடுகிறது. அதாவது உருவகத்தில் மாறுபாடு நுண்ணிய பொருள் உயர்வு இருக்கிறது என்று பொருள்.

முகம் தாமரையை வெல்லும், தாமரையை வெல்லும் முகம் போன்ற உவம விரிகள் தொல்காப்பியத்தாலும் அணி இலக்கண நூல்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதை உரையாசிரியர்கள் உறழ்ச்சி உவமை என்றும், முன்னதை ஒப்பு உவமை என்றும் வேறுபடுத்துவார்கள். இங்கும் தாமரையின் மலர்ச்சியே உலக அளவில் புகழ் பெற்றதை மறுக்கா விட்டாலும், தாமரையை முகம் வெல்லும் என்னும் போது தாமரையைவிட முகத்தின் மலர்ச்சி அதிகமானது என்பதே பேசுவோர் கருத்து உண்மையில் ஆய்வு நோக்கு, கருத்து அல்ல. உணர்வு நோக்கு பேசுவோர் முகத்தின் மலர்ச்சி (உண்மையில் அந்த முகத்தை உடையவரின்) மேல் உள்ள அழுத்தமான அன்பின் வெளிப்பாடு, அதனால் உவமையில் வெறும் ஒப்புமை மட்டும் அல்லாமல் பேசுவோர் உணர்வும் (இங்கு காதல் உணர்வும்) கலந்துள்ளது என்று புலனாகிறது. இவை பொது நிலைக் கருத்துக்கள். அவைகளை உரையாசிரியர்கள் எப்படி விளக்கியுள்ளார்கள் என்று பார்ப்போம்.

## இளம்பூரணர் விளக்கம் :

'உவமிக்கும் பொருளை உவமமாக்கிக் கூறினாலும் மயக்கம் அற்ற சிறப்பு நிலைமையான் எய்தும் உவமை ஆகும்' என்று பதவுரை எழுதி, இளம்பூரணர் இரண்டு உதாரணங்களை மட்டுமே கொடுத்துள்ளார். அவை பிற்பகுதியில் விளக்கப்படுகிறது.

**பேராசிரியர் விளக்கம் :**

பேராசிரியர் பதவுரையிலேயே 'உயர்ந்தன் மேற்றே உள்ளுங்காலை' (3) என்று சூத்திரத்தை எடுத்துக் காட்டி 'என்புழி உவமம் உயர்த்துவரல் வேண்டும் என்றான், இனிப் பொருளினை உவமமாக்கி, உவமையை உவமிக்கப்படும் பொருள் ஆக்கி மயங்கக் கூறுங்காலும் அஃது உவமம் போல உயர்ந்ததாக்கி வைக்கப்படும்' என்று விளக்கியிருப்பது சிறப்பானது. அதாவது உவமையில் உவமானம் உயர்ந்ததாகக் கருதப்பட்டாலும், உருவகத்தில் உவமானம் உவமேயத்தின் இடத்தைப் பெறுவதால், உவமேயம் உவமானத்துக்கு உரிய சிறப்பைப் பெறுகிறது என்பது கருத்து. அதாவது உவமைத்தொடரில் உவமானம் ஓரளவு குறைந்த மதிப்பை உடையதாக அமைந்தாலும், உருவகத் தொடரில் ஒத்த மதிப்பைப் பெறுகிறது என்று பொருள். அதன் மூலம் உருவகத்தில் உருவகமாக அமைந்த உவமானம் (முகம்) கூடுதல் சிறப்பைப் பெறுகிறது என்பது உணரத் தகுந்தது. அதை ஒரு உதாரணத்தின் மூலம் விரிவாக விளக்கியுள்ளதில் அந்தக் கருத்து நன்றாகத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

*"வருமுலை அன்ன வன்முகையுடைத்து*
*திருமுகம் அவிழ்ந்த தெய்வத் தாமரை"* (சிறுபாணாற்றுப்படை72–3)

என்ற வழி I. வருமுலையும் திருமுகமும் ஈண்டு உவமையாகி முகையும் பூவும் பொருள் (உவமேயம்) ஆயின. II.ஆண்டு முலையும் முகமும் உயர்ந்தனவாகச் செய்தமையின் அவையே உவமம் ஆயின. III. இவை உவமைத் தொகை ஆகுங்கால் முலைக்கோங்கம், முகத் தாமரை எனப்படும். IV. இவற்றை வேறு உருவகம் *என்றும் பிறர் மயங்குப.* V 'சிறப்பு' என்றதனால் ஒப்புமை மாத்திரை அன்றித், தான் புனைந்துரைக்கக் கருதிய முலையினையும் முகத்தினையும் உயர்ந்த பொருளாகிய உவமத்தினும் உயர்ந்ததாகச் சிறப்பித்து உரைத்தான் என்பது. 'மருளறு சிறப்பின்' என்றதனான் VI. அங்ஙனம் சிறப்பிக்குங்கால் மயக்கம் தீரச் சிறப்பித்தல் வேண்டும். VII. அஃது உலகினுள் உயர்ந்தது என்று ஒப்ப முடித்த பொருளினையும் சிறப்பித்தற்கு உவமம் செய்யவோ எனிற் செய்யார் என்பது என்னை VIII. முகமொக்கும் தாமரை என்றால்' முகத்திற்கும் தாமரைக்கும் சிறப்பு உடைமை மயங்கி வாராது பின்னும் முகத்திற்கே சிறப்பாம் என்பது கருத்து. அஃது எனப்பட்டது பொருள் ஆகலான் 'உயர்ந்ததன்மேற்று' என்னும் விதி அப்பொருட்கு எய்துவிக்க என்ற பேராசிரியரின் தொடர் உதாரணமும் விளக்கமும் மிகச் சிறப்பானது. (விவாதத்தில் குறிப்பிடுவதற்கு எண் கொடுக்கப்பட்டுள்ளது)

i. உருவகத் தொடர் உதாரணமும் தொல்காப்பிய முறைப்படி விளக்கமும். ii. அதனால் உவமையாகிப் பொருள் சிறப்புப் பெறுகிறது. அதாவது உருவகம் உவமானத்துக்குக் கூடுதல் சிறப்பைக் கொடுக்கிறது. அதாவது மொழி அமைப்பு மாற்றம் மூலம் பேசுவோர் சிறப்பை ஏற்றுகிறார். மொழியியல் நோக்கில் இது ஒரு மொழிமாற்று (transformation) என்றாலும், பேச்சின் தலைப்பு, கூடுதல் சிறப்புப் பெறுகிறது என்பது உற்பத்திப் பொருண்மையியலார் (generative semantist) கருத்தை ஒத்துள்ளது. அதனால் இந்தக் கருத்து இன்னும் உள்வாங்கிக் கொள்ளப்படவில்லை.

உண்மையில் அது உருவகத்தொடர், பேராசிரியர் புறநிலை அமைப்பை ஒட்டி அதை உவமைத் தொடர் என்றும் முலைக் கோங்கம் என்பதை உவமைத்தொகை என்றும் குறிப்பிட்டதோடு iii. உருவகம் என்று கூறுவதும் iv. மயக்கம் தருவது என்று கூறுவதும் விவாதத்துக்கு உரியவை. ஏனெனில் உவமைத் தொடருக்கும் உருவகத்தொடருக்கும் பொருள் மாறுபடுவதைப் பின்பகுதியில் v. அவரே குறிப்பிட்டுள்ளார். Vவது கருத்தான 'தான் புனைந்துரைக்கக் கருதிய முலையினையும் முகத்தினையும் உயர்ந்த பொருளாகிய உவமத்தினும் உயர்ந்ததாகச் சிறப்பித்து உரைத்தான்' என்று விளக்கத்தின் சிறப்பு சுட்டிக்காட்டத் தகுந்தது. அதாவது பொதுவாக உவமைத் தொடரில் உவமானமே(கோங்கு, தாமரை) உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. தொல்காப்பியமும் 'உயர்ந்ததன் மேற்றே' (3) குறிப்பிடுகிறது. ஆனால் முலைகோங்கம் முகத்தாமரை என்ற தொடர்களில் முலையும் முகமும் அவைகளைவிடப் பொருள் சிறப்புப் பெறுகிறது என்பது பேராசிரியர் கருத்து. vi. கருத்தின் நோக்கம் என்ன? உருவகத்தை (முகத்தாமரை) ஒருவர் முகம் போன்ற தாமரை என்று தாமரையைச் சிறப்பிப்பதாகக் கொள்ளலாம். ஆனால் தாமரையின் சிறப்பை ஊர் அறிந்தது என்பதால் யாரும் உவமேயமாக அதன் சிறப்பை விளக்கமாட்டார்கள் என்பது அவருடைய வாதம். 'ஊர் அறிந்த பாப்பானுக்கு பூணூல் எதற்கு' என்பது போல அமைகிறது. vii. அதனால் முகத் தாமரை என்னும்போது 'முகத்திற்கே சிறப்பாம்' என்பது தொடரியல் நோக்கில் முகம் அடைச்சொல் என்று கொள்ளாமல் கருத்தாடல் நோக்கில் தலைப்பு என்று கொள்ள வேண்டும் என்பது கருத்து.

உருவகத் தொகையை விரிக்கும் போது முகம் போன்ற தாமரை என்று விரிக்காமல் முகமாகிய தாமரை என்று விரிக்க வேண்டும் என்பார்கள். தண்டியலங்கார உரை (37) விரி உருவகத்தில் உருவக உருபு ஆகிய, ஆக என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் மேற்காட்டிய சிறுபாணாற்றுப்படை அடிகளில் *'அன்ன'* என்ற உருபு பயன்படுத்தியுள்ளது கவிஞரின் உரிமை அல்லது செய்யுள் விகாரம் என்று கொள்ள வேண்டும்.

உண்மையில் உவமைத் தொடருக்கும் உருவகத் தொடருக்கும் சிறிது பொருள் இருப்பதும், அதில் உருவகத்தொடர் எடுத்துக்கொண்ட பொருளுக்கு அதாவது தலைப்புக்கு அதிக சிறப்பைப் புலப்படுத்துவதும், அவைகளில் பேசுவோர் உணர்வு புதைந்திருப்பதும் வற்புறுத்த வேண்டிய செய்திகள் ஆகும்.

'உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து/ஒன்று என மாட்டின் அஃது உருவகம் ஆகும்'. (உவமையாம் பொருளையும் உவமிக்கப்படும் பொருளையும் வேறுபாடு ஒழிவித்து ஒன்று என்பதோர் உள்ளுணர்வு தோன்ற ஒற்றுமை கொளுத்துவது) என்பது தண்டியலங்கார (36) விளக்கம். இந்த விளக்கத்தின்படி முகமே தாமரை என்று தேற்ற ஏகாரத்தைக் கொண்டும் உருவகத் தொடரை விரிக்கலாம் என்று கொள்ளலாம்.

**உதாரணங்கள் :**

இளம்பூரணர் இரண்டு உதாரணங்களைக் கொடுத்து விளக்கம் தராவிட்டாலும் அவை உருவகத்தில் உள்ள சிக்கல்களை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது சிறப்பானது.

*"இருப்புமுகஞ் செறித்த வேந்தெழின் மருப்பிற்*
*கருங்கை யானை கொண்மூ வாக*
*நீண்மொழி மறவர் எறிவனர் உயர்த்த*
*வாண்மின் ஆக வயங்குகடிப் பமைந்த*
*குருதிப் பலிய முரசுமுழக்கு ஆக*
*அரசராப் பனிக்கும் அணங்குறு பொழுதின்*
*வெவ்விசைப் புரவி வீசுவளி ஆக*
*விசைப்புறு வல்வில் வீங்குநாண் உகைத்த*
*கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடைக்கை*
*ஈரச் செறுவயிற் றுஏர் ஆக*
*விடியல் புக்கு நெடிய நீட்டிநின்*
*செருப்படை மிளிர்ந்த திருத்துறு பைஞ்சாற்*
*பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி*
*விழுத்தலை சாய்த்த வெருவரு பைங்கூழ்ப்*
*பேய்மகள் பற்றிய பிணம்பிறங்கு பல்போர்பு*
*கணநரி யோடு கழுதுகளம் படுப்பப்*
*பூதங் காப்பப் பொலிகளந் தழீஇப்*
*பாடுநர்க்கு இருந்த பீடுடை ஆள'.* (புறநானூறு. 369. 1–18)

(பொருள் : யானை மேகமாகவும், வீரர்கள் வாள் மின்னலாகவும், முரசொலி மழையின் முழக்கமாகவும், அரசர்களாகிய பாம்புகள் அஞ்சி நடுங்கி பொழுதில், குதிரைகள் மோதுகின்ற காற்றாகவும், வில்லின் அம்புகளாகிய மழை பொழிந்த பரந்த போர்க்களத்தில் குருதி சிந்தி ஈரமான இடத்தில் தேர் ஏர்களாகவும், விடியல் காலத்தில் புகுந்து படைவாளால் படைச்சாலில் வேலும் கணையம் என்னும் கருவியும் விதைகளாக விதைத்துப் புதையச் செய்து, பிணங்களாகிய பசிய பயிர்களாகவும் பிணக் குவையல்கள் (வைக்கோல்) போர்களாகவும் நரிகளும் பேய்களும் உண்ணப் பூதங்கள் காவலைச் செய்யப் பிணப்போர்க் களத்தே பொருநர் முதலியோர் பாடக் கேட்பதற்காக வீற்றிருக்கும் பீடு உடையவனே).

இங்கு மொழி அமைப்பு நோக்கில் இரண்டு வகை அமைந்துள்ளது: 1.யானை கொண்மூ ஆக என்றாற் போன்றது 2. படைவாள் = சால், வேல்(விதை), பிணம் (விழுத் தலைசாய்த்த)= பைங்கூழ். அவைகளை முறையே தண்டியலங்காரம் (37) விரி உருவகம் (உருவக உருபுகள் ஆகிய, ஆக) என்றும், தொகை உருவகம் (உருபு அமையாதது) என்றும் கொள்ளலாம்.

***"பாசடைப் பரப்பிற் பன்மலர் இடைநின்று***
***ஒருதனி ஓங்கிய விரைமலர்த் தாமரை***
***அரச அன்னம் ஆங்கினிது இருப்பக்***
***கரைநின் றாடும் ஒருமயில் தனக்குக்***
***கம்புட் சேவற் கனைகுரல் முழவாக்***
***கொம்பர் இருங்குயில் விளிப்பது காணாய்'*** (மணிமேகலை 4.8–13)

((பொய்கையில்) பசுமையான இலைகளின் பரப்பில் பல மலர்களிடையே நின்று தனியே உயர்ந்து காணப்படும் தாமரை மலரில் அன்னம் இனிதாக அரசு வீற்றிருக்க அந்தப் பொய்கையின் கரையில் ஒரு மயில் நடனமாடுகிறது. அதற்குச் சம்மங்கோழி மத்தள ஒலியாகக் குரல் எழுப்புகிறது. மரக்கிளையில் இருக்கும் குயில் பாடுவதைப் பார்ப்பாயாக).

இங்கு அரச அன்னம்=உவமத்தொகை, அன்னம் அரசன் போல் தாமரை மலரில் வீற்றிருக்கிறது. அன்ன அரசு என்றிருந்தால் உருவகத் தொடராக அமையும். சேவல் குரல் முழவு=உருவகத்தொகை, முழவுக் குரல் என்றால் உவமைத் தொடர்.

**பொது விளக்கம் :**

தாமரை முகம் என்ற உவமைத் தொடரைத் தாமரை போன்ற முகம் என்று விரித்தாலும், மலர்ச்சியில் தாமரை மலர்ச்சியே உலகம் அறிந்தது என்றும் பேசுவோர் உவமத் தொடர்/தொகை மூலம் முக மலர்ச்சியை

விளக்குகிறார் என்றும், அது உணர்வின் (அன்பு/காதல்) வெளிப்பாடு என்றும், அதனால் மலர்ச்சியில் தாமரை உயர்ந்தது என்ற கருத்து புதைந்துள்ளதாகவும் கருதப்படுகிறது அது மேலே குறிப்பிட்டபடி அது ஒப்பு உவமை ஆகும்.

உறழ்ச்சி உவமையில் (தாமரையை வெல்லும் முகம்) பேசுவோர் தாமரை மலர்ச்சியே உலகம் அறிந்தது என்பது தன்னைப் பொறுத்த வரையில் மறுக்கக் கூடியது என்ற கருத்து. அது உணர்வின் ஆழத்தின் வெளிப்பாடு.

முகத்தாமரை/தாமரையாகிய முகம் என்றும் தாமரையே முகம் என்ற உருவகத் தொடரில் மலர்ச்சியில் இரண்டும் ஒத்தது என்பதை *'வேற்றுமை ஒழிவித்து ஒன்று'* என்று தண்டியலங்காரம் குறிப்பிட்டுள்ளது. அதனால் உருவகத்தில் உவமையைவிடச் சிறப்புப் பொருள் அழுத்தம் பெறுகிறது என்றும் அதற்குக் காரணம் பேசுவோர் உணர்வு மாற்றமே என்பதும் வற்புறுத்தத் தகுந்தது.

எனவே உவமை, உருவகம் ஆகிய தொடர்களில் பேசுவோர் சிறப்பிக்கக் கருதிய பொருளின் சிறப்பு மாறுபாடும் புதைந்துள்ளதும் குறிப்பிடத் தகுந்தது.

**துணையன்கள் :**


சுந்தரமூர்த்தி, கு.(ப–ர்) 1985, தொல்காப்பியம் பொருளதிகாரம் பிற்பகுதி பேராசிரியர் உரை (குறிப்புரையுடன்), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அ.நகர்

சுப்பிரமணியன், ச.வே.2008 தொல்காப்பியம் முழுவதும் விளக்கவுரை, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.

*தண்டியலங்காரம்*, கழகப்பதிப்பு, 1958, சென்னை

தமிழண்ணல், 2003 சங்க இலக்கிய ஒப்பீடு (இலக்கியக் கொள்கைகள்), மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, நான்காம் பதிப்பு, 2014.

வெள்ளைவாரணன், க(ப–ர்) 1985, தொல்காப்பியம் உவமையியல் உரை வளம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

# சொற்களின் தோற்றமும் மறைவும்

பேராசிரியர் **பழனி அரங்கசாமி**
மேனாள ஆங்கிலப் பேராசிரியர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை–625 021
கைபேசி . 94865 76619

தமிழ் மொழியின் இலக்கணப் பிரிவுகளான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் அய்ந்தனுள் சொல் இலக்கணமும் ஒன்று. அய்ந்தன் முறை வைப்பிலேயே இரண்டாவதாக நிற்பதே சொல்லின் முக்கியத்துவத்தைக் குறிக்கிறது. உலக மொழியாகப் பேசப் பெறும் ஆங்கிலத்தில் யாப்புக்கும் அணிக்கும் தனி இலக்கணம் இல்லை. உலகளாவிய மொழியே ஆயினும் இத்தாலிய, கிரேக்க மொழிகளின் கவிதை அமைப்புக்கு ஆங்கில மொழி கட்டுப்பட்டது என்பதை எண்ணுந்தொறும் தமிழின் வரலாற்றுத் தொன்மையும் இலக்கிய மேன்மையும் உயர் தனிச்சிறப்பும் நன்கு விளங்கும்.

## சொற்களின் ஆற்றல் :

"எந்த மொழிக்கும் எழுத்தாகிய வரி வடிவமே ஆதாரம் என்றால் அதற்கு அடுத்த நிலையில் இருப்பதே சொல். அது பெயர், வினை, தலைப்பு, கருத்து ஆகியவற்றைச் சுட்டிக் காட்டும் எழுத்துக்களை ஆதாரமாகக் கொண்ட சொல்லானது பொருளோடு இணையும்போது அவை சார்ந்த எந்த மொழியும் உயிர்பெற்று இயங்குகிறது. நகமும் சதையும் போல் சொற்கள் வலிவும் பொலிவும் பெறுகின்றன பொருளில்லாத சொற்கள் வெற்றொலியாய் வீணாகிப் போய்ப் பயனின்றி நிற்கும். பயன்தரும் சொற்களின் ஓசைக்கும் ஒலிக்கும், தனிப்பட உயிர்ப்பும் உணர்வும் இருக்கிறது. கேட்போரைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் இருக்கிறது. இசையாக ஒலிக்கும் போது செவிக்கின்பம் பயக்கிறது. உரத்த ஓசையாக ஒலிக்கும் இவ்வளவு முக்கியத்துவம் இருப்பதனாலோ என்னவோ தேவாரச் சொற்றொடர் இறைவனைப் பற்றி "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்று விளக்கம் தருகிறது.

கருத்தாழமும் சிந்தனைத் தெளிவும் மிகுந்த கவிஞனின் ஆளுமையில் அவன் நினைத்தபடி ஒரு காட்சியை உருவாக்கும் ஆற்றலை அவன் கையாளும் சொற்கள் தான் உண்டு பண்ணுகின்றன. நாடு புகழ்ப் பாரதியின் பாடு பொருளான ஊழிக்கூத்து பற்றிய கவிதையே இதற்குச் சான்று.

*"வெறும் வெளியில் ரத்தக்களியொடு பூதம் பாட*
*பாட்டின் அடிபடு பொருளும் நின் அடிபடும் ஒலியில் கூட*
*களித் தாடும் காளி கங்காளி*
*ஆடும் கூத்தை நாடச் செய்தாய் என்னை என்னை"*

சேதுபதி மன்னரின் குதிரைப் படை ஆவேசத்தோடு போரிடும் காட்சியை

*"மண்டலங்களும் தயங்க மந்தரம் சுழன்றொதுங்க*
*அண்ட பிண்டமும் கலங்க அந்தரம் திரண்டெழும்ப*
*அட்ட திக்கும் எட்டு வெற்பும் அப்புறப்படக்குதித்து*
*வட்டமிட்டரைக் கணத்தில் மைப்புயல் திரட்டகற்றி*
*மற்றறச் சினத் தெதிர்த்த மக்கரைப்படத் துவைத்து*
*வெற்றி பெற்ற சக்ர வட்டவெண்பரியான்"*

என்று சதாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் *விறலிவிடு தூதில்* காட்டுகிறார். குதிரைப்படையின் காட்சியொடு, அடுக்குச் சொற்களின் மிடுக்கையும் ஆற்றலையும் ஈண்டு காண்கிறோம்.

வெறும் சொற்களை அறிதல் உணர்தல் மட்டும் போதாது. நிலைமைக்கேற்ப அவற்றைப் பயன்படுத்தி ஏற்ற இறக்கத்தோடு மேடையேறி முழங்கவும் தெரிதல் வேண்டும் அத்தகையோர் மக்கட் சமுதாயத்தைக் கட்டியாள முடியும் எனும் கருத்தைத்தான் குறள் எடுத்தியம்புகிறது.

*"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை*
*இகல்வெல்லல் யார்க்கும் அரிது"*

**ஆங்கில மொழியின் சொற்பெருக்கம் :**

மக்களிடையே கருத்துப் பரிமாற்றத்துக்கான ஒரு சாதனமாக இருப்பதுவே சொல். சொற்பெருக்கம் உள்ள எந்த மொழியும் வளமான மொழியாகக் கருதப்படுகிறது. பேச்சிலும் எழுத்திலும் உயிர் பெற்று உலாவுகின்ற அனைத்து மொழிகளிலும் சொல்லின் வளர்ச்சியைக் காண முடியும். பொதுவாக ஆழ்ந்த சிந்தனையும், அனுபவங்களும், புதிய கண்டுபிடிப்புகளும் புதுப் புதுச் சொற்களை உண்டு பண்ணக்கூடிய ஆதாரமாக விளங்குகின்றன. பேச்சு வழக்கற்ற மொழிகளில் சொல்லின் பிறப்புக்கோ பெருக்கத்துக்கோ இடமில்லை. இலக்கியம், இலக்கணம், இசை, ஓவியம், நுண்கலை ஆகிய துறைகளில் முற்காலத்திலிருந்தே புழக்கத்தில் இருக்கும் சொற்களோடு இன்றைக்கால அறிவியல், பொறியியல் வளர்ச்சியினால் பன்னூற்றுக்கணக்கான சொற்கள் அண்மைக் காலத்திய ஆங்கில மொழியில் இடம் பெற்று வருகின்றன.

இன்றைய ஆங்கிலத்தின் வயது ஏறத்தாழ அறுநூறு ஆண்டுகள்தான். பல்வேறு அறிவியல் பொறி இயல் துறைகளின் கலைச் சொற்களை ஒதுக்கிவிட்டு உலகியல் புழக்கத்தில் உள்ள ஆங்கிலச் சொற்களின் எண்ணிக்கையே ஆகஸ்பர்டு ஆங்கில அகராதி கூறுகின்றபடி ஆறு லட்சத்துக்கு அதிகம் என்று அறிகிறோம். 2010-ஆம் ஆண்டு வெளியாகியுள்ள *காலின்ஸ் அகராதி* ஆங்கில மொழியின் சொற்கள் ஆறரை

லட்சத்துக்கு மேற்பட்டவை என்று குறிப்பிடுகிறது. பொறி இயல், கணினி இயல், அறிவியல் சொற்களேயன்றி ஏனைய இலக்கிய, இலக்கண, மனித வளச் சொற்களை மட்டும் உள்ளடக்கிய விரிவான ஆங்கில அகராதி இருபது பெரிய தொகுதிகளாக வெளியாகி உள்ளன.

## தமிழில் அகராதிகள் :

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மை வாய்ந்த தமிழ் மொழியில் அத்துணைச் சொல் வளம் இல்லை. சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள ஆங்கில–தமிழ் சொற்களஞ்சியத்தில் ஏறத்தாழ எழுபத்து மூவாயிரம் தமிழ்ச் சொற்களைக் கணக்கிட்டால் தமிழ்ச் சொற்கள் நான்கு லட்சத்துக்கு மேல் இருக்க வாய்ப்பில்லை எனத் தோன்றுகிறது. தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் தனித் *தமிழ்ப் பேரகராதி* மூன்று தொகுதிகளோடு முற்றுப் பெறாமல் உள்ளது தென் கிழக்கு ஆசிய நாடுகளான பர்மா, தாய்லாந்து, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் மற்றும் மொரிஷியஸ், தென்னாப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் வாழும் தமிழர்களின் பேச்சு வழக்கிலிருந்தும் சொற்களைத் திரட்டி ஒட்டு மொத்தமான தமிழ்ச் சொற்களைக் கணக்கிடுவதோடு தமிழின் சொல் வளத்தை மேலும் பெருக்குவது தமிழ்ச் சமுதாயம் மேற்கொள்ள வேண்டிய இன்றியமையாத கடமையாகும்.

சென்ற நூற்றாண்டின் ஐம்பதுகளில் அமெரிக்க ராணுவ ரகசியங்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப் பெற்ற கணினி அறிவியல் இன்றைய நிலையில் உலகளாவிய கருத்துப் பரிமாற்றப் பொருளாக மாறி உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலந்தொட்டுக் கணினிப் பயன்பாட்டுச் சொற்கள் மட்டுமே ஆயிரக்கணக்கில் ஆங்கில மொழியில் குடியேறி உள்ளன நூறு கோடி சமக் கூறுகளைக் குறிப்பிடும் நானோ டெக்னாலஜி எனும் இக்காலத்திய அறிவியல் துறையினால் நூற்றுக் கணக்கான சொற்கள் ஆங்கிலத்தில் உருவாகி உள்ளன. காலந்தொறும் பெருகி வருகின்ற அறிவியல் துறையின் திறமை வாய்ந்த நிபுணர்கள் தமிழராக இருப்பின், தமது அரிய கண்டுபிடிப்புகளுக்குத் தமிழில் பெயர் வைத்தால் அத்தகைய புதுச்சொற்கள் தமிழுக்கு வலிவும் பொலிவும் தருவதோடு ஏனைய அயல் மொழிகளுக்கும் ஆதாரமாக அமையும். 20–ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் விமானங்கள் குறித்த ஆய்வு பிரெஞ்சுக்காரரால் கையாளப்பட்டமையால் விண்வெளிப் பயணம் பற்றிய பற்பல சொற்கள் பிரெஞ்சு மொழியில் உள்ளன.

## சொல் வரலாறு அகராதிகள் :

இத்தகைய சிந்தனை ஓட்டத்திற்கு அப்பால் எந்த மொழியிலும் சொற்கள் எப்படி உருவாகியது என்று காண்பது ஒரு சுவையான இலக்கியப் பயிற்சியாகும். தொல்காப்பியம், நன்னூல் போன்ற இலக்கண நூல்கள் அக்காலத்தில் புழக்கத்தில் இருந்த சொற்களும் எழுத்துகளும் எவ்வாறு பல், நாக்கு, மூக்கு, உதடு ஆகியவற்றின் உதவியால் ஒலி வடிவமாக

வெளிப்படுகிறது என்பதோடு, அவற்றின் இலக்கண அமைதி, மாற்றம், புணர்ச்சி, அளபெடை, உருபு நிலை, வழுவமைதி போன்றவற்றையும் கூறுகின்றனவே தவிரச் சொற்கள் எவ்வாறு உலக வழக்கிற்கு ஏற்பத் தோற்றம் எடுத்துள்ளன என்பதைக் கூறவில்லை. இடுகுறியாகவும், காரணமாகவும், திசைச் சொல்லாகவும் தத்பவமாகவும், தற்சமமாகவும் சொற்கள் தோன்றுகின்றன என்று பொதுப்படையாகச் சொற்களின் வரலாற்றைச் சுட்டிக் காட்டுகின்றன. அவற்றின் குறிக்கோளும் அதுதான். இலக்கண நூல்களின் நோக்கமும், கொள்கையும் சொற்களின் வரலாற்றைக் கூறுவதல்ல. எனவே சொற்களின் தோற்றத்தையும் அவற்றின் வரலாற்றினையும் குறிப்பிட்டுக் கூறுவது சொல் வரலாற்று அகராதி (Etymology) ஆகும். இது இலக்கண நெறிமுறைகளினின்று சற்றே மாறுபட்டது எனலாம்.

எந்த மொழியிலும் உள்ள சொல்லகராதி அந்த மொழியின் சொற்கள் அனைத்திற்கும் வரலாறு கூற இயலாது. பத்தாம் நூற்றாண்டிலிருந்து முழு உருவம் பெற்ற ஆங்கில மொழியிலேயே அம்மொழியின் சொல்லகராதியினைச் சென்ற 1923–ஆம் ஆண்டில் U.ஸ்கீட்ஸ் என்பார் தொகுத்தார். அதன் பின்னர் டி.எப் ஹோட் அப்பணியினை 1996–ஆம் ஆண்டு மேலும் திருத்தமுறச் செய்தார். அப்படி இருந்தும் ஏராளமான ஆங்கிலச் சொற்களுக்கு அவர்களாலேயே ஆதாரம் கொடுக்க இயன்றிலது. அண்மைக்காலத்திய ஆங்கில மொழியின் சொல் வரலாற்றுக்கே இந்நிலை என்றால் பழம்பெரும் தமிழ்மொழியின் ஆயிரக்கணக்கான சொற்கள் அனைத்திற்கும் எவ்வாறு வரலாறு கூற இயலும்? அனைத்துச் சொற்களின் பிறப்பு வளர்ப்பு பற்றிய வரலாற்றினை ஆய்ந்து காணுதல் முற்றுமாக இயலாவிடினும், அந்தத் துறையில் தொடக்க கால முயற்சி எடுத்த மாகறல் கார்த்திகேய முதலியார் 1913–ஆம் ஆண்டு *மொழி நூல்* (1913) எழுதி வெளியிட்டார். அந்நூலின் இலக்கண இயல் சொற்களின் பிறப்பு பற்றி ஆய்ந்துரைக்கிறது. யாழ்ப் பாணத்து ஞானப்பிரகாசர் 1923–ஆம் ஆண்டில் *சொற்பிறப்பு ஆராய்ச்சி நூல்* ஒன்றனை எழுதியுள்ளார். பின்னர் ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு மேலாக சொற்களின் வரலாற்றை யாரும் தனிப்பட ஆய்வு செய்ததாகத் தெரியவில்லை. ஆயினும் கிறித்துவ சகாப்தத்திற்குப் பின்னர் பற்பல நூற்றாண்டுகளாக அயலார் நுழைவு, அன்னியர் போராட்டம், வணிகத் தொடர்பு, இலக்கியப் பரிமாற்றம், சமயச்சார்பு ஆகியவற்றினால் ஏராளமான பிறமொழிச் சொற்கள் தமிழில் உருமாற்றம் பெற்றுப் புழக்கத்துக்கு வந்துவிட்டன.

### தமிழில் வடமொழி நுழைவு :

இன்றைய நிலையில் தமிழின் தலை நூலாகக் கருதப்படும் தொல்காப்பியத்திலேயே,

> *“வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ*
> *எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே”* –தொல்–எச்சவியல்

என்று வடமொழி எழுத்தை நீக்கி அதனைத் தமிழாக்கி அனுமதிக்க வழி வகுக்கப் பெற்றுள்ளது. இதனைச் செயற்படுத்துவதிலும் ஒரு சிக்கல் ஏற்படுகிறது. மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பெயரை இராசாசி என்று முரசொலி நாளிதழ் அச்சிட்டிருந்தது. அது பற்றி அந்நாளிதழின் ஆசிரியர் கலைஞர் கருணாநிதி அவர்களின் கருத்தும் அவர் எடுத்த முடிவும் ஈண்டு நோக்கத்தக்கன.

"ஒரு முறை மூதறிஞர் இராஜாஜி அவர்கள் முரசொலிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். எம்.ஜி.ஆர், ஜானகி, ராஜேந்திரன், விஜயகுமாரி என்றெல்லாம் செய்தி வெளியிடுகின்ற முரசொலியில் என் பெயரை மட்டும் ராசாசி என்று வெளியிடுவது நியாயமா என்று கேட்டிருந்தார். அன்றைக்கே அவரது நியாயத்தை ஏற்றுக் கொண்டு மாற்றிக் கொண்டேன். எடுத்துக் காட்டாக உஷா சில்க் ஹவுஸ் என்பதை உஷா பட்டாடை நிலையம் என்று எழுதினால் போதும். உசா என்று மாற்றிடத் தேவையில்லை."

–ஆட்சிச் சொல் அகராதி முன்னுரை (2000).

## வடமொழியில் தமிழ்ச் சொற்கள் :

தொல்காப்பியத்திற்குப் பின்னர் வந்த சங்க நூல்களில் கூட வடசொற் கலப்பு மிகவும் அருகியே காணப்படுகிறது. வடசொல் நுழைவு பற்றி மட்டுமே பேசிடுவோர் தமிழிலிருந்து வடமொழிக்குச் சென்ற சொற்களைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை. ஆரியப் பூசாரியர் தமிழகம் வந்த பின், தமிழ்ச் சொற்களை ஏராளமாகக் கையாண்டும், அவற்றினின்று நூற்றுக் கணக்கான நுண்பொருட் சொற்களைத் திரித்துக் கொண்டும், சமற்கிருதம் என்னும் இலக்கிய நடைமொழியைப் பெருவளப்படுத்தித் தமிழ் நூல்களை எல்லாம் ஒவ்வொன்றாகப் பெயர்க்கத் தொடங்கினர் என்பார் பாவாணர். டாக்டர் கிட்டல் என்பார் 1894–ஆம் ஆண்டு தொகுத்த கன்னட அகராதியில் நாடகம், பலி, பக்கம், பேய் முதலிய சொற்களைத் தமிழ் உள்ளிட்ட திராவிட மொழிகளிலிருந்து வடமொழி கடனாகப் பெற்றுள்ளது என்கிறார். தமிழ்ப் பேரறிஞர் தேவ நேயப் பாவாணர் தாம் எழுதிய வடமொழி வரலாறு (1967) எனும் நூலில் நூற்றுக் கணக்கான வடமொழிச் சொற்கள் தமிழிலிருந்து பிறந்தவை என்று சான்றுகளுடன் நிறுவியுள்ளார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வந்தவர் மொழியா, செந்தமிழ்ச் செல்வமா எனும் தனது நூலில் வடசொல்லாகக் கருதப்பெறும் பற்பல சொற்கள் தமிழ் மொழிச் சொற்களே என்பார். கதா, அலாதி, அச்சாரம், ஜடை போன்றவை வடமொழியில் எடுத்தாளப் பெற்ற தமிழ்ச் சொற்கள் எனத் தகுந்த ஆதாரமுடன் விளக்கிக் கூறுகிறார்.

தமிழின் தலைசிறந்த நீதி நூலாகிய திருக்குறளில் பயின்று வரும் பன்னீராயிரம் சொற்களில் ஏறத்தாழ அய்ம்பது சொற்களே வடசொற்கள் என்கிறார் குறளை ஆங்கிலத்தில் பெயர்த்த ஜே.லாசரஸ். இந்த அய்ம்பது சொற்களை மகாவித்வான் ச.தண்டபாணி தேசிகர் பட்டியல் இட்டுக் காட்டுகிறார்.

சங்க காலத்திற்குப் பின்னர் சிறுகச் சிறுகத் தமிழ் நூல்களில் வடமொழியின் குடியேற்றம் பெருகத் தொடங்கியது. கி.மு.ஆறு மற்றும் ஏழாம் நூற்றாண்டுகளில் பல்லவ மன்னர்கள் வடமொழியைப் பெரிதும் ஆதரித்தவர்கள் பாகூரில் வடமொழிக் கல்லூரி ஒன்றையே நிறுவி யிருந்தான் மகேந்திரவர்மன். சமணர் காலத்தில் தமிழில் வடமொழியைப் பாதிக்குப் பாதி கலந்து உருவாக்கப் பெற்ற மணிப்பிரவாள நடையும் சிறிதுகாலம் தலைதூக்கி நின்றது.

## தமிழில் பிற மொழிச் சொற்கள் :

தமிழ்நாட்டில் முகமதியர் ஆட்சிக் காலத்தில் அரபு, பாரசீகம், உருது ஆகிய மொழிகளின் சொற்கள் தமிழர்களது பேச்சு வழக்கில் கலந்து விட்டன. காலப்போக்கில் உரைநடையிலும், பாக்களிலும் கூடச் சிற்சில இணைந்துவிட்டன. சான்றாக முசாபரி, கஜானா, சிப்பாய், பங்களா போன்ற உருது மற்றும் பார்சியச் சொற்களை எடுத்துக் காட்டலாம். வராந்தா என்பது போர்த்துக்கீசியச் சொல்.

அருணகிரியாரின் பாடற்பகுதி ஒன்றில்,

“சித்தர் விஞ்சையர் மாகர் சபாசென” எனுமிடத்தில் சபாஷ் எனும் சொல்லும், குமரகுருபரரின்,

***“குறவர் மகட்குச் சலாமிடற்கு ஏக்கறு***
***குமரனை முத்துக் குமரனைப் போற்றுதும்”***

எனும் வரிகளில் சலாம் எனும் சொல் வருவதும் குறிப்பிடத்தக்கன. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய மண்ணில் வாணிகம் செய்ய வந்து இந்த அயலகத்து மண்ணில் ஆட்சியும் புரிந்த அய்ரோப்பியரின் இடையீட்டினால் ஆங்கிலம், பிரெஞ்சு, போர்ச்சுக்கீசிய மொழிச் சொற்கள் தமிழில் இடம் பெற்று விட்டன. அதனுள்ளும் தமிழில் கலந்துள்ள ஆங்கிலச் சொற்களின் பட்டியல் மிகவும் நீண்டு விடும்.

## ஆங்கிலத்தில் தமிழ்ச் சொற்கள் :

மிளகுநீர், சுமார், கட்டுமரம், கறி ஆகிய தமிழ்ச்சொற்கள் ஆங்கிலத்திலும் இடம் பெற்று விட்டன. ஆக்சுபர்டு ஆங்கில அகராதியின் ஆறாம் பதிப்பில் கடைசி நூறு பக்கங்களில் தமிழ் உள்ளிட்ட அனைத்து இந்திய மொழிகளில் இருந்தும் ஆங்கிலம் எத்தனை சொற்களை ஏற்றுக் கொண்டுள்ளது என்பதனை ஒரு பட்டியல் போட்டுள்ளனர். தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய அண்டை மாநிலச் சொற்களோடு, தமிழில் போர்த்துக்கீசிய, அராபிய, உருதுச் சொற்களும் கலந்துள்ளன என்பதைச் சான்றுகளோடு நிறுவி உள்ளார் மாவட்ட ஆட்சியராக இருந்த முத்துசாமிப்பிள்ளை–*தமிழ் உரைநடை வரலாறு–1988*

இப்படி மொழிகளுக்கிடையே காலந்தொறும் எவ்வித வேற்றுமையும் இன்றிச் சொற்களின் கொடுக்கல் வாங்கல் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இதற்கிடையில் வடமொழி வெறியும், ஒரு சார்பு நோக்கமும் கொண்ட சாமிநாத தேசிகர் தாம் எழுதிய *இலக்கணக்கொத்து, பிரயோக* விவேகம் ஆகிய நூல்களில் தமிழ் மொழியை இழித்தும் பழித்தும்

1) *ஆயினும் தமிழ்நூற்களவிலை அவற்றுள்*
*ஒன்றேயாயினும் தனித் தமிழ் உண்டோ-*
*அன்றியும் ஐந்தெழுத்தால் ஒரு பாடை என்று*
*அறையவும் நாணுவர் அறிவுடையோரே- எனவும்,*

2) *வடமொழி தமிழ்மொழி என இரு மொழிக்கும்*
*இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக*

எனவும் கூறியுள்ளார். இந்த ஒரு சார்புடை வடமொழி வாணரது தன்னிச்சையான கூற்று தமிழ் மொழி வரலாற்றில் ஒரு பெரிய திருப்பத்தை உண்டு பண்ணிவிட்டது.

## தனித்தமிழ் இயக்கம் :

தமிழ்க்கடல் மறைமலை அடிகள் தேசிகரின் கூற்றை அறிந்து வெகுண்டெழுந்தார் வேதாசலம் எனும் தனது பெயரை மறைமலை என்றும் தான் நடத்தி வந்த *ஞானசாகரம்* எனும் இதழின் பெயரை *அறிவுக்கடல்* என்றும் மாற்றியதோடு அதுவரை தான் எழுதி வெளியிட்டிருந்த நூல்களில் உள்ள வடமொழிச் சொற்களை நீக்கித் தமிழ்ச் சொற்களை அமைத்துவிட்டார்

மறைமலை அடிகளார் 1916–ஆம் ஆண்டில் துவக்கிய தனித் தமிழ் இயக்கத்தைப் பின் பற்றுவதைக் கொள்கையாக ஏற்று நடைமுறைப்படுத்த எண்ணினால், வளர்ந்து வரும் அறிவியல், பொறிஇயல் வளர்ச்சியும் அவை பற்றிய கலைச் சொற்களைத் தனித்தமிழில்தான் பெயர்த்தாக வேண்டுமா என்கிற சிக்கலும் குறுக்கே நிற்கின்றன. மெத்த வளரும் மேற்கத்தியக் கலையாம் அறிவியலின் சொற்களை அருந்தமிழுக்கு எப்படியாயினும் பெயர்த்தாக வேண்டும். தனித்தமிழ் இயக்கம் தொய்வின்றித் தொடர்ந்து வளர்ந்து கலைச்சொற்கள் தமிழில் பெருக வேண்டும் என்று கருதி உழைத்தவர் மொழி நூல் அறிஞர் தேவநேயப் பாவாணர். அவரது தலைமையில் வெளி வந்த *சொற்பிறப்பியல் அகர முதலி* 1985–முதல் பற்பல தொகுதிகளாக வெளி வந்திருக்கிறது. நீண்ட காலத்திட்டமான 12 தொகுதிகளை நிறைவு செய்ய வேண்டிய திட்டப் பணியாகத் தொடங்கப் பெற்ற அத்துறையின் பணி இன்னும் நிறைவுறவில்லை

## பெயர்க்கப் பெற்ற சில சொற்கள் :

மறைமலையார், பாவாணர் போன்ற அறிஞர் பெருமக்களது தமிழ்ப் பேரார்வம் தலை நிமிர்ந்து செயற்பட வேண்டுமாயின், பல்லாயிரக்கணக்கான

அறிவியல் சொற்கள் தமிழுக்குப் பெயர்க்கப்பட வேண்டும். இந்த மொழி பெயர்ப்பு ஆழ்ந்து சிந்தித்துச் செயல்படவேண்டிய பணியாகும். சொல்லுக்குச் சொல் பெயர்க்காமல், கருத்தறிந்து மாற்றம் செய்தலே நன்று. பாவாணர் அவர்கள் ஆக்ஸ்பர்டு ஆங்கில அகராதியினை எருதந்துறை ஆங்கில அகராதி எனப் பெயர்த்துள்ளார் விபுலாநந்த அடிகளார் எழுதிய *மதங்க சூளாமணியில்* ஆங்கில நாடகப் பேராசான் ஷேக்ஸ்பியரின் பெயரை செகப்பிரியர் என்று மாற்றி எழுதியுள்ளார். இச்செயல் ஜமாபந்தி எனும் சொல்லைச் சமபந்தி எனத் தவறாகப் பெயர்க்கப்படுவதை ஒத்ததாகும். இவ்வாறு ஒரு சொல்லையோ ஊரின் பெயரையோ தனிப்பட்டோரின் சொந்தப் பெயரையோ இவ்வாறு பெயர்த்தல் பொருத்தம் அற்றது. அவை உலகம் முழுதும் ஒரே பெயரில் தான் இருக்க வேண்டும் இல்லையாயின் ஒரே பெயர் நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் குழப்பம் ஏற்பட்டு விடும்.

ஒருங்கிணைப்பு இன்றிச் சிற்சில அமைப்புகளும், தனியார்களும் ஒரே ஆங்கிலச் சொல்லுக்குப் பற்பல பெயர்ப்புகளைச் செய்து விடுகின்றனர். பல்கலைக் கழகங்களில் ஆய்வு செய்து பட்டம் பெறுவோரை டாக்டர் என அழைப்பது உண்டு இதனைப் பண்டாரகர் என்று கூறினர். "மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே" என்பது தேவாரச் சொற்றொடர். "இராக்கதர் ஈட்டி வைத்த பாவ பண்டாரம் அன்ன" என்பது கம்பராமாயணச் சொற்றொடர். பண்டாரம் என்றால் பொருட்குவியல் என்று பொருள். ஆயினும் அச்சொல் இன்றைய வழக்காறு நிலையில் புழக்கத்துக்கே வரவில்லை. இலங்கையில் டாக்டர் பட்டம் பெறுவோரைக் கலாநிதி என்கின்றனர். அண்மைக்காலந்தொட்டு தமிழகத்தில் முனைவர் எனும் சொல் பயிலப் பெறுகிறது ஒரு சொல்லை உறுதி செய்து அதுவே புழக்கத்துக்கு வருதல் நன்று.

சிற்சில சொற்கள் தவறாகவும் பெயர்க்கப் பெறுகின்றன. (Transliteration) எனும் ஆங்கிலச் சொல்லை "ஒலிபெயர்ப்பு" எனல் பொருந்தாது. ஒரே சொல்லை வெவ்வேறு மொழிகளின் எழுத்துகளில் மாற்றி எழுதுகிறோம். எழுத்துதான் பெயர்கிறதேயன்றி அச்சொல்லின் ஒலி பெயரவில்லையே! எழுத்துப் பெயர்ப்பு என்பதே பொருத்தமானதாகும்

இப்படி மென்மேலும் வளர்க்கப் பெற வேண்டிய தமிழின் சொற்பெருக்கத்தையும், இலக்கணத்தையும், உச்சரிப்பினையும், ஒருங்கிணைத்து நெறிப்படுத்த வேண்டிய ஒரு அமைப்பு இன்றைய தேவை. தமிழ் வளர்ச்சிக் கழகம் *ஆட்சிச்சொல் அகராதியினை* வெளியிட்டதோடு இயல், இசை, நாடகம், வரலாறு போன்ற மனிதவளத் துறைகளின் வளர்ச்சியினைக் கருத்திற் கொண்டுள்ளதேயன்றி அறிவியல், பொறி இயல், கட்டிடக்கலை, மருத்துவம் போன்ற துறைகளைத் தனது தமிழ்ச்சொல் வளர்ச்சிப் பணியில் இணைக்கவில்லை.

### மொழி வளர்க்கும் பிரெஞ்சு அகாதெமி :

பிரான்சு நாட்டில் 1635—ஆம் ஆண்டு பதின்மூன்றாம் லூயி காலத்தில் தொடங்கப் பெற்ற *பிரெஞ்சு அகாதெமி* இன்று வரை பிரெஞ்சு மொழியின் பன்முக வளர்ச்சியைக் கொண்டு இயங்குகின்றதோடு, தேர்ந்தெடுத்த பல்துறை அறிஞர்குழுவின் ஆலோசனைகளையும் ஏற்றுச் செயல்படுகிறது.

பிரெஞ்சு மொழியின் இலக்கண இலக்கிய அறிவியல் துறைகளில், எந்த மாற்றமும், திருத்தமும், இணைப்பும், பெயர்ப்பும் சேர்ப்பும், ஏறத்தாழ நானூறு ஆண்டுகளாகச் செயற்பட்டு வரும் அந்த மாமன்றத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னரே புழக்கத்திற்கு வருகின்றன. அரசுகளும் ஆட்சிகளும் மாறினாலும் அந்தப் பிரெஞ்சு அகாடெமி படைப்பிலக்கியம், பெயர்ப்பு என மொழி வளர்பினைத் தவறாது செய்து வருகிறது. அறிவியல், அரசியல், இலக்கியம், இலக்கணம் போன்ற பல்வேறு துறைகளிலும் கற்றுத்துறை போகிய பேரறிஞர்களே அதில் உறுப்பினராக உள்ளனர். அதனை முன் மாதிரியாகக் கொண்டு தமிழுக்கு அரசியல் கலப்பில்லாத அப்படியொரு மாமன்றம் தேவை.

இப்போதிருக்கின்ற தமிழ் வளர்ச்சிக் கழகத்தையோ, உலகத் தமிழ்ச் சங்கத்தையோ பிரெஞ்சு அகாதெமியினைப் போன்று திருத்தி அமைத்தாலும் பொருத்தமே. தெலுங்கு மொழி நிறுவனம் ஒன்றை ஆந்திர அரசு அமைக்க இருப்பதாகவும், அம்மொழியின் அறிவியல் மொழி வளர்ச்சியினையே அது தலையாய குறிக்கோளாகக் கொண்டுள்ளது எனவும் தெரிகிறது. புதிய சொற்களைத் தெலுங்கில் படைப்பதற்கென்றே விஜயவாடாவிலிருந்து *அம்மனூடி* எனும் மாத இதழ் வெளியாகிறது. தமிழக அரசு இதனை மனதிற் கொண்டு தமிழ்ச்சொல் வளர்ச்சிக்கு ஆவன செய்தல் தமிழ் மொழிக்குச் செய்கிற அரிய பணியாக அமையும்.

## சொற்களின் தோற்றம் :

மொழி இயலார் சொற்களின் தோற்றத்திற்கு டிங்டாங், பூ பூ கோட்பாடு என்பனவற்றைச் சான்று காட்டுவர். கா, கா என்று கரைகின்ற ஒலிக்குக் காரணமாகிய பறவையினைக் காக்கா அல்லது காக்கை என்று பெயர் சூட்டினர். வெப்ப நாடுகளில் விளையும் முருங்கைக் காயினைப் பார்த்த ஆங்கிலேயருக்கு அது முரசினை அடிக்கும் குச்சி போலத் தெரிந்தது. எனவே அதற்கு அவர்கள் Drum Stick என்றும் இசைப் பறவையாக நாம் கருதும் குயில் குக், குக் என்று ஒலி எழுப்புவதனால் அதற்கு Cuckoo என்றும் பெயர் வைத்துள்ளனர்.

இலக்கண மரபுக்கு உட்பட்டுத் திசைச் சொல்லாகவும், திரி சொல்லாகவும் வருவனவேயன்றி, மொழிபெயர்ப்பாளர்களும் பத்திரிகையாளர்களும் தமக்குத் தோன்றியவாறு அயன்மொழிச் சொற்களை எவ்விதப் பொருத்தமும் இன்றித் தமிழில் எழுதி விடுகின்றனர். தேனிலவு, அய்ந்தாம் படை, முதலைக்கண்ணீர் போன்ற சொற்கள் அப்படியே ஆங்கிலத்திலிருந்து பெயர்க்கப்பெற்றவை. அவை முறையே புதுமணத் தம்பதியரின் சுற்றுலா, எதிரிகளின் ஒற்றன், போலியான நடிப்பு ஆகிய பொருளைத் தருவன இந்தப் பொருளுக்கும், சொற்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இருப்பினும் இவை பேச்சு வழக்கிலே மட்டுமின்றி கிரியா வெளியீடான *தற்காலத் தமிழ் அகராதியிலும்* (1992) குடியேறி விட்டன. அரசியல் உலகில் கட்சி மாறுவதையும், அதற்கு விலை பேசுவதையும் குறிப்பிடுகிற (Horse Trading) எனும் சொல்லை அப்படியே குதிரை பேரம் என்று பெயர்த்து அதுவும் தமிழில்

ஒரு புதிய சொல்லாக வந்து கொண்டுளது. காயில் (Coil) எனும் ஆங்கிலச் சொல்லை அடியொற்றித்தான் "காயலாங்கடை" எனும் சொற்றொடர் தமிழில் தோன்றிவிட்டது. ஆங்கிலத்தை நோக்கும்போது அந்த அளவுக்குத் தமிழில் சொற்பெருக்கம் இல்லையென்றாலும், பிஞ்சு, காய், செங்காய் போன்ற சொற்களுக்கு இணையான தனிச் சொற்கள் ஆங்கிலத்தில் இல்லை என்பது ஈண்டு நோக்கத்தக்கது.

பேசுவோருக்கும் கேட்போருக்கும் இடையில் நிலவுகின்ற கருத்துப் பரிமாற்றத்துக்குத் துணை நிற்கின்ற எந்தச் சொல்லும் வழக்கில் நிலை பெற்று காலப் போக்கில் அகராதியிலும் இடம் பெற்று விடுகின்றன. வளர்ந்து வரும் மொழிகளில் சொற்களின் வளர்ச்சியும் பெருக்கமும் நிகழ்ந்து கொண்டே இருக்கும் இப்படிப் புதுவதாகப் பிறக்கும் சொற்களைக் கட்டிக் காப்பது அகராதிகள்தாம். எனவே சாதாரணமாகப் பத்தாண்டு காலத்திற்கு ஒரு முறை பழையனவற்றைக் கழித்துப் புதுப்புது அகராதிகளை நோக்கு நூலாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆங்கில மொழியில் 1900–ஆம் ஆண்டு தொடங்கி 2000–ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு பத்தாண்டு காலத்திலும் எந்தெந்தப் புதிய சொற்கள் எங்கெங்கு வெளியாகியுள்ளன என்ற விவரங்களுடன் A Century of New words (2007) என்னும் நூலை ஆக்ஸ்பர்டு யுனிவர்சிட்டி நிறுவனத்தினர் வெளியிட்டுள்ளனர். அந்நூலில் கொடுக்கப் பெற்றுள்ள ஏராளமான சான்றுகளில் தொண்ணூறு விழுக்காடு புதிய ஆங்கிலச் சொற்கள் மாதம், வாரம், மற்றும் நாளிதழ்களில் வெளி வந்தவை. அதாவது ஆங்கில மொழியின் சொல் வளர்ச்சியில் செய்திப் பத்திரிகைகள் பெரும்பங்கு வகிக்கின்றன என்பது இதனால் தெளிவாகிறது.

## சொற்கவின் மறைவு :

பல்வகையானும் ஒவ்வொரு மொழிக்கும் இப்படி வந்து சேருகின்ற சொற்களில் சிற்சில காலப்போக்கில் சமுதாயப் புழக்கத்திலிருந்தும், இலக்கிய வழக்கினின்றும் அருகிப் போய் மறைந்து விடுகின்றன. இவையே வழக்கிறந்த சொற்கள் எனப்படும். தோன்றுவன மறையும் என்பதோடு பிறந்தன இறக்கும் எனும் உலகியல் நியதிக்குச் சொற்களும் விதி விலக்கல்ல. சான்றாகத் தொல்காப்பியம் உருபு இயலில் குறிப்பிடப் பெறும் புழன், அழன் ஆகியவற்றை வழக்கிறந்த சொற்களாகக் காட்டலாம். சங்க இலக்கியத்தில் பயின்று வரும் யாணர், முருடு, பண்ணியம், கூலம், ஈரணி, பண்ணியம் அம்பல், கந்து என வழக்கிறந்த சொற்களின் இப்பட்டியலை நீட்டிக் கொண்டே போகலாம்.

சொற்கள் வழக்காற்றில் புழங்கப் பெறவில்லையாயின், அவை மறைந்த சொல்லாகி விடுகின்றன. அசுணம் எனும் பறவை கடுமையான பறையொலி கேட்டால் இறந்துவிடும் தன்மை உடையது என்றும், காலப்போக்கில் அந்த இனமே அழிந்துவிட்டது என்றும் அறிகிறோம். இற்றைக் காலத்திலும்

மின்னாற்றலில் இயங்கும் ஏராளமான கைபேசிகளின் தாக்கத்தினால், சிட்டுக் குருவி இனமே அழிகிறது. எனவே இவ்விரு பறவைகளின் பெயர்கள் உலக வழக்கினின்று ஒதுங்கி விடுகின்றன.

சங்க இலக்கியத்தில் காணப்பட்டாலும், வழக்கிறந்த சொற்களாகக் கருதத்தகும் முப்பது சொற்களை வரிசைப்படுத்தி உரிய விளக்கங்களுடன் *சங்கச் செவ்வி* (2010) எனும் கையடக்க நூலை ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தார் வெளியிட்டுள்ளனர். சிற்சில சொற்கள் வழக்காற்றில், இருந்தாலும், அவற்றின் பொருள் மறைந்து விடுகிறது. இதற்குச் சான்றாக ஒரு கற்பனையான உரையாடலைக் குறிப்பிடலாம் "நான் அந்தப் புத்தகத்தை வாங்கினேன்" என்றால் அந்த வாக்கியத்தின் பொருளைத் தொல்காப்பியரால் கூடப் புரிந்து கொள்ள இயலாது. ஆனால் "யாம் அந்நூலைப் பெற்றோம்" என்று சொன்னால் அப்பொருள் அவருக்கு விளங்கிவிடும்.

சமூகப் பழக்க வழக்கங்களிலும் அன்றாட இல்லறப் பணிகளிலும் எந்திரங்களின் பயன்பாடு அதிகமாகி வருகிறது. எனவே நுகத்தடி, மேழி, கூண்டு வண்டி, உறி, உலக்கை, மத்து ஆகிய சொற்கள் மறைந்து வருகின்றன. இச்சொற்கள் இன்றைய இளைய தலைமுறைக்கு வழக்கிறந்த சொற்களாகிவிட்டன. பண்டைக் காலத்தில் தோளிலும் முதுகிலும் மூட்டை முடிச்சுகளை நீண்ட தூரம் தூக்கிக் கொண்டு கால்நடைப் பயணம் செய்வர் பயண அலுப்பில் தாமாகவே பாரத்தை இறக்கி வைக்கும் இடமே சுமைதாங்கிக்கல். இப்போது அத்தகைய நடைப்பயணம் இல்லை. சுமைதூக்கி நடக்கும் பழக்கமும் இல்லை. எனவே சுமைதாங்கிக் கல் என்னும் சொற்றொடருக்கு விளக்கம் கூறினால்தான் பலருக்கு அது என்னவென்றே புரியும். எனவே அந்தச் சொற்றொடர் மறைந்து வருகிறது கை விளக்கும் மின் விளக்குகளும் பெருகிவரும் இற்றைக் காலத்தில் ஆங்கிலத்திலிருந்து தமிழ்த் தழுவலாக வந்துள்ள லாந்தர், அரிக்கன் போன்ற சொற்களும் பேச்சு வழக்கில் கேட்க முடிந்திலது. ஒரே பொருளைக் குறிப்பிட இரண்டு சொற்கள் இருந்தால், அவற்றுள் ஒரு சொல் மட்டுமே வழக்காற்றில் இருக்கும்போது, மற்றொரு சொல் மறைந்து விடுகிறது. நிலக்கடலை என்னும் சொல்லே புழக்கத்தில் இருப்பதால், மணிலாக் கொட்டையின் தழுவலான மல்லாக் கொட்டை எவராலும் பேசப்படுவதில்லை விளக்கெண்ணை என்பதே பேச்சு வழக்கில் இருப்பதால் ஆமணக்கெண்ணை வழக்கிறந்துவிட்டது.

தொன்மை வாய்ந்த நம் நற்றமிழ்ச் சொற்களின் பிறப்பு, வளர்ப்பு, இறப்பு பற்றிய தனித்த ஒரு ஆய்வினைத் தமிழ் வளர்ச்சிக் கழகம், உலகத் தமிழ்ச் சங்கம், செம்மொழித் தமிழ் ஆய்வு நிறுவனம் போன்ற அரசுச் சார்புடைய அலுவலகங்கள் மேற்கொண்டு பணியாற்றுவது வரவேற்கத்தக்க தொண்டாக அமையும்.

# கம்பனில் போர்

முனைவர் **உ.கருப்பத்தேவன்**
உதவிப் பேராசிரியர்
ஒப்பிலக்கியத் துறை, தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை–625 021.
அலைபேசி . 94435 71776

## சென்ற இதழ்–தொடர்ச்சி :

அதிகாயனுக்குத் துணையாக வந்த நராந்தகனை அங்கதனும் (7928) போர்மத்தனை நீலனும் (7952), கும்பனைச் சுக்கிரீவனும் (7968) நிகும்பனை அனுமனும் இப்போரில் கொன்றனர் (7976).

கும்பகருணன் இராமனால் மாண்டு, இராவணன் கையறுநிலை எய்தியது போன்று இலக்குவனைத் தான் கொன்று இராமனுக்குக் கையறுநிலை கொணர வேண்டும் என்பதே அதிகாயனின் கோட்பாடு. அரக்கர் மாயம் செய்து போர் புரிதலில் வல்லவர்கள். இவன் அவ்வாறு செய்யாதது ஒரு தனிச் சிறப்பாகும்

திசை யானைகளை வென்ற தீரம், சிவனுறையும் கயிலை மலையைப் பெயர்த்தெடுக்க முயன்ற தோள் வலிமை, நாரதர் மகிழ இனியன கூறிய நாவன்மை, சிவபெருமான் அருளிய வாள், வாகை மாலைகள் சூடியிருந்த பத்து மணிமுடிகள், இவையெல்லாவற்றுடன் தன் வீரத்தையும் சேர்த்து இராவணன் போர்க்களத்தில் போட்டுவிட்டு வெறுங்கையுடன் இலங்கையினுள் நுழைந்தான். தோல்வியின் காரணமாக நாணித் தலைகுனிந்து தனிமையில் தனது மாளிகையை அடைந்தான். *இராவணனுடைய நாணமும் சீதை நகைப்பாளே* என்ற அடிப்படையில் அமைந்ததே. பெரும்பாலும் இந்த உலகத்தில் ஆடவர்கள் தங்கள் செயலின்மை கருதி வெட்கப்படுவதில்லை. பெண்கள் நகைப்பார்கள் என்ற அச்சமும் நாணமுமே ஆடவர்களுக்கு மிகுதியும் உண்டு. இதற்கு இராவணனும் விதிவிலக்கு அல்லன்.

## இராவணனுக்குக் கும்பகருணன் அறவுரை :

இராவணன், போரில் தோல்வியுற்றதால் அரக்கர்கள் நெடுந்துயில் கொண்டிருந்த கும்பகருணனை எழுப்பினர் கும்பகருணன் துயிலெழுந்து இராவணன் அரசவையை அடைந்து இராவணனுக்கு அறவுரை கூறினான். சீதையை விடுவிக்கும்படி அறிவுறுத்துகிறான். விபீடணனுடன் கலந்து உறவாடி வாழ்க என்றான். கம்பன் *'ஐயறு தம்பியோடு அளவளாவுதல்'* என்று விபீடணனைக் கும்பகருணன் கூற்றில் குறிப்பிடுகின்றான்.

ஐயத்திற்கு இடமில்லாத விபீடணன் என்கின்றான் கம்பன். விபீடணன் இராமனிடம் சேர்ந்துவிட்டதால் 'இராவணன் அவனைப் போருக்குப் பயந்துவிட்டான்; கோழை; உடன்பிறந்த அண்ணனுக்குத் துரோகம் செய்துவிட்டு இராமனுடன் சேர்ந்து ஆட்சியதிகாரத்தைப் பற்றிக் கொள்ளத் திட்டமிட்டான்' என்றெல்லாம் பழி வரும் என நினைத்து, விபீடணனை ஐயத்திற்கு இடமளிக்காத ஒழுகலாறு உடையவன், 'அறநெறி' ஒன்றே அவன் சார்பு என்பதை நிலைநிறுத்த *'ஐயறு தம்பி'* என்கின்றான் கும்பகருணன். சீதையை விடுவித்து, விபீடணனுடன் உறவு கொண்டு வலிமையுடன் பகைவரை எதிர்த்துப் போராட வேண்டும் என்பதே கும்பகருணன் அறிவுரை.

***'தையலை விட்டு, அவன் சரணம் தாழ்ந்து, நின்***
***ஐயறு தம்பியோடு அளவளாவுதல்***
***உய்திறம், அன்றெனின் உளது வேறொரு***
***செய்திறம், அன்னது தெரியக் கேட்டியால்'***

(கம்பரா.பா.எண்.7359)

***'பந்தியில் பந்தியில் படையைவிட்டு, அவை***
***சிந்துதல் கண்டு, நீயிருந்து தேம்புதல்***
***மந்திரமன்று; நம்வலி எலாம் உடன்***
***உந்துதல் கருமம் என்றுணரக் கூறினான்'***

(கம்பரா.பா.எண் 7360)

கும்பகருணன் அறிவுரைகளால் இராவணன் எவ்வித மாற்றமும் பெறவில்லை. இராவணன் போருக்குப் புறப்பட்டான். இதனால் கும்பகருணன் இராவணனை விலக்கிவிட்டுத் தானே போருக்குப் புறப்படுகின்றான். அவன் இராவணனிடம் *'என் மரணத்திற்குப் பிறகாவது சீதையை விட்டுவிடு'* அது நன்மையும் தவமுமாகும் என்று கூறி இராவணனிடம் விடைபெற்றுப் போருக்குச் செல்கின்றான்.

போர்க்களத்தில் விபீடணன் கும்பகருணனைச் சந்திக்க வருகின்றான். அவனைக் கும்பகருணன் ஏற்காமல் *'குலத்தின் இழுக்கின் வழி விளைந்த விளைவு'* என விமர்சிக்கின்றான். ஏந்திய வில்லுடன் இராமனும், அவனருகில் வெல்லுதற்குரிய இலக்குவனும் எமனும் நிற்கின்றனர். விபீடணன், கும்பகருணனை அறநிலை கருதி, இராமனிடம் சேரும்படியும், இலங்கையின் ஆட்சியை ஏற்குமாறும் கூறுகின்றான். நிலந்தோய வீழ்ந்து கும்பகருணனை வணங்குகின்றான். கும்பகருணன்– விபீடணன் உரையாடல் அறத்திற்கும் பாசத்திற்கும் நடக்கும் வாழ்க்கைத் தத்துவமாகும். *'நன்றியறிதல்'* என்னும் பண்புடைய கும்பகருணன் மரணம் புகழுடையது. ஒரு தலைவன் தக்க ஆலோசனை இல்லாமல் தீமை செய்தால் அவனைத் திருத்தும் முயற்சியில் ஈடுபடுதல் வேண்டும் திருத்த இயலாவிட்டால் அவனுடன் இருந்து சாதலே அறம், ஒழுக்கம் என்பது கும்பகருணன் கொண்ட அறக்கொள்கையாகும். நிலையில்லாத அரசை விரும்பாமல், தன் அண்ணன் இராவணனுக்காகப் போராடி அவனுக்கு முன் சாதலையே தனது கடமையாகக் கொள்கின்றான் கும்பகருணன்

கும்பகருணன் இராமனுடன் போரிட்டு இராமனது அம்புகளால் கை, கால்களை இழக்கின்றான். அவன் இராவணனுக்கு அழிவு ஏற்படப் போவதை நினைத்து வருந்துகின்றான். இராமனிடம் விபீடணனைக் காப்பாற்றுக என வேண்டுகின்றான்.

மாயா சனகன்—இராவணன் சூழ்ச்சி :

ஆசை காட்டுதல், கெஞ்சுதல், சினத்தலால் சீதையை வசப்படுத்த இயலாத இராவணன், மாய வித்தைகளைக் காட்டிச் சீதையை அச்சுறுத்த விழைகின்றான். சீதையின் தந்தை சனகனைப் போல மாயையால் ஒரு சனகனைத் தோற்றுவித்துச் சிறைப்படுத்தித் தொல்லை செய்கின்றான். இதைக் கண்ட சீதை புலம்புகின்றாள். ஆயினும், மாயா சனகன் சீதையிடம் இராவணனை ஏற்றுக்கொள் எனக் கூறிய அறிவுரையைக் கேட்டுச் சீதை உண்மையை உணர்கின்றாள். அவன் உண்மையான சனகன் இல்லை என அறிகின்றாள்

*"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்*
*குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்"* (குறள் : 959)

என்னும் குறள்நெறியோடு இதனை ஒப்பிடலாம்.

மாயா சீதை :

சீதை எந்தச் சூழ்நிலையிலும் தான் கொண்ட உறுதியில் தளரவில்லை. இராம—இராவணப்போர் தொடர்கிறது நாகபாசத்தாலும் பிரம்மன் அம்பாலும் இராம-இலக்குவர் துயருகின்றனர். இதைக் கண்ட சீதையும் துன்பமடைகின்றாள். இறுதியில் *சாம்பவான்* சஞ்சீவி பர்வதத்தின் மூலிகைகளைக் கொண்டு வரச் சொல்கின்றான். அனுமன் அம்மலையையே பெயர்த்துக் கொண்டு வருகின்றான். அம்மலையின் மருந்துக் காற்றினால் அனைவரும் பிழைத்துக் கொள்கின்றனர். மீண்டும் *இந்திரசித்து* தன் மாயையால் ஒரு மாயா சீதையைத் தோற்றுவிக்கின்றான் சீதையைக் கொல்வதைக் கண்ட *அனுமன்* அழுகின்றான். *விபீடணனும்* சீதையின் மரணத்தை நம்புகின்றான். இராமனும் சோர்கின்றான். ஆயினும், இலக்குவன் மட்டுமே சோர்ந்து நிற்கும் இராமனைப் போரிடத் தூண்டுகின்றான். *'யாராக இருந்தாலும், நம்மால் மூவுலகையும் அழிக்க இயலும்'* என்கின்றான் இலக்குவன்.

இந்திரசித்து அயோத்தியை அழிக்கச் சென்றுள்ளான் என்னும் செய்தியைக் கேட்டும் இராமன் சோர்கின்றான். அப்போதும் இலக்குவனே பரதனின் வலிமையைக் கூறி இராமனைத் தேற்றுகின்றான். இராமனின் நிலையைக் கண்ட விபீடணன் அசோகவனம் சென்று சீதையைக் கண்ணாலும் கருத்தாலும் காணுகின்றான். அவன் கண்ணால் கண்டது சீதையின் வடிவத்தை, கருத்தால் கண்டது சீதையின் தூய்மையையும் கற்பையும். இவ்வாறு தொடர்ந்து அரக்கர்கள் மாயமந்திரச் செயல்களில் ஈடுபடுகின்றனர். இந்திரசித்து நிகும்பலை யாகம் செய்து இராம—இலக்குவரை அழிக்க முற்படுகின்றான். இலக்குவன் இந்திரசித்துடன் போரிடச் செல்கின்றான்.

## இந்திரசித்து மரணமும் அறிவுரையும் :

உயிர்கள் புண்ணியப் பலன்களைப் பெற உதவுபவன் பாகசாதனன் என்னும் இந்திரன். அவனை இராவணன் மகனான மேகநாதன் கயிற்றால் கட்டி இலங்கைக்குக் கொண்டு சென்று விட்டான். அவனைப் பிரம்மன் மீட்டு வந்தான் (188). மலைகளின் சிறகுகளை வெட்டியதால் சயிலகோபன் என்னும் பெயர் பெற்ற இந்திரன், அயோத்தியில் சுமித்திரைக்கு ஆதிசேடனுக்கு உரிய ஆயில்ய நாளில் இலக்குவன் பிறந்த போது, *"போயது எம்பொருமல்"* என்று தேவருடன் ஆர்த்து எழுந்தான் (284). இலக்குவனால் இந்திரசித்து மாளப் போகிறான் என்பதால் இந்திரன் தம் கிளைஞரான தேவருடன் ஆர்த்து எழுந்தான் இச்செய்தியைக் காணும் போது இலக்குவனை விடப் பிராயத்தில் இந்திரசித்தன் மூத்தவன் என்பது தெரிகின்றது.

மேகநாதன் என்பது இந்திரசித்துவின் முதற்பெயர். அவன் இராவணனின் உரிமை மனைவியான மண்டோதரிக்கு மகனாகப் பிறந்த போதே மேகம் போல் முழங்கியதால் *மேகநாதன்* எனும் காரணப் பெயர் பெற்றிருந்தான். மேகநாதனின் நேர் இளையவன் *அக்ககுமாரன்* என்பான். இராவணனின் மற்றொரு உரிமை அரசியான தானியமாலிக்குப் பிறந்தவன் அதிகாயன் போர்க்களத்தில் அக்ககுமாரனும் மாயம் செய்ததில்லை; அதிகாயனும் மறைந்து நின்று அத்திரம் எய்தியதில்லை. ஆனால் இந்திரசித்துவோ சென்ற களங்களில் எல்லாம் திடுமென்று வானில் மறைவான்; பூசை புரிவான்; பகைவர் மேல் படைக்கலன் எறிவான். இது அவனது வாடிக்கை.

இந்திரசித்து மாவீரன்தான். மும்மூர்த்திகளுக்கும் இணையான வீரம் பெற்றவன்தான். அதனாலேயே அவனைப் பற்றி இராவணன் பெருமிதம் கொண்டிருந்தான். அனுமன் முதன் முதலில் இலங்கை மாளிகைகளில் சீதையைத் தேடிய போது கும்பகருணனைக் கண்டான். பின்னர் விபீடணனைக் கண்டான். அடுத்து அவன் கண்டது இந்திரசித்துவை. அவனுடைய உருவத்தை நோக்கி வியந்தான். முக்கண்ணன் சிவனின் வீர மகனான முருகனின் ஆறு முகங்களில் ஐந்தையும், பன்னிரு கரங்களில் பத்தையும் ஒளித்துக் கொண்டது போலத் தோன்றினான். அழகுப் பெண்டிர் குழாத்தினிடையே உறங்கிக் கொண்டிருந்தான்.

இதைக் கண்ட அனுமன் மேலும் வியந்தான். குகையில் உறங்கும் இளஞ் சிங்கமான இவ்வீரன் ஒளி வீசும் பற்களைக் கொண்ட அரக்கனோ? சிவபிரானின் மகனான முருகனோ? அறிய முடியவில்லையே! ஆயினும் இளைய இந்த வீரனும், இலக்குவ ஏந்தலும் பல நாள் அவர்க்குப் போர் உள்ளது என உணர்ந்தான்.

> ***"முக்கண் நோக்கினன் முதல்மகன், அறுவகை முகமும்***
> ***திக்கு நோக்கிய புயங்களும் சில கரந்தனையான்***
> ***ஒக்க நோக்கியர் குழாத்திடை உறங்குகின்றானைப்***
> ***புக்கு நோக்கினன் புகைபுகா வாயிலும் புகுவான்"*** (4974).

அனுமனது கணிப்பில் மாபெரும் வீரனாகத் தோன்றிய இந்திரசித்து ஏன் விண்ணில் மறைந்து போரிட வேண்டும் என்பது புரியவில்லை.

இராவணன் தானே போருக்குப் புறப்பட ஆயத்தமானான். அது கண்ட இந்திரசித்து எழுந்து, "ஈசன் முதலிய பெருந்தேவர்கள் அளித்துள்ள பாசம் முதலிய படைகள் நம் படை வீரர் பலரிடம் உள்ளன. அம் மானுடர் இருவரையும் குரங்குகளுடன் கொன்று, அவர்களை வென்று அடியேன் வருவேன். அவர்களுடன் நீ போரிடப் போவது தகாது" எனத் தடுத்தான்.

*"யானை இலர், தேர் புரவி யாதும் இலர்; ஏவும்*
*தானை இலர்; நின்ற தவம் ஒன்றும் இலர்; தாமோ*
*கூனல் முதுகின் சிறு குரங்கு கொடு வெல்வார்?*
*ஆனவரும் மானிடர்; நம் ஆண்மை இனிது அன்றோ?"* (6133).

இளைய தம்பியான வீடணன், இந்திரசித்துவைப் பகைவரின் படை வலிமையை உள்ளவாறு அறியும் அனுபவம் இல்லாதவன் என்று கழறிக் கண்டித்தான். பின்னர் இராவணன் நந்தியிடமிருந்தும், வேதவதியிடமிருந்தும் பெற்றுள்ள சாபங்களைப் பலரும் அறிய அவ் அவையில் நினைவுபடுத்தினான்.

இலங்கையில் நிகழ்ந்த முதல் நாள் போரில் இராவணன் தோற்று வெறுங்கையோடு இலங்கை புக்கான், இரண்டாம் நாள் போரில் கும்பகருணன் மாண்டான். அதே நாளில் இராவணன் மாயாசனகனைப் படைத்துச் சீதையை அச்சுறுத்தி அதிலும் தோற்றான். மூன்றாம் நாள் தானியமாலியின் மகன் அதிகாயன் இறந்தான். இதனால் நான்காம் நாள் நிகழ்ந்த போரில் இந்திரசித்தன் ஈடுபட்டான்.

*"பாம்பின்தம் வெம்படை பாசுபதத் தினோடும்*
*தேம்பல் பிறை சென்னி வைத்தான் தரு தெய்வ ஏதி*
*ஓம்பித் திரிந்தேன் எனக்கு இன்று உதவாது போமேல்*
*சோம்பித் துறப்பென்; சோறும் உவந்து வாழேன்"* (8013).

என்று கூறி இராம இலக்குவரைக் கொல்வேன் என்று சூள் செய்தான். 'என் தம்பி அதிகாயனைக் கொன்றவனது உடம்பைத் துண்டாக்கி அழித்தால் அல்லது, இந்நகருக்கு மீண்டும் வாரேன். எனக்கு வாழ்வும் வேண்டாம். வானரர்களைக் கொன்று குவித்து, இலக்குவனை யான் கொல்லாது ஒழியின் திருமால் முதலானவர்கள் நகைக்கட்டும்; என் தம்பியினைக் கொன்றவன் குருதி பூமியில் படியுமாறு யான் செய்திலனேல் எனக்கு ஒரு முறை தோற்ற இந்திரனுக்கு நான் நான்கு முறை தோற்றவனாவேன். நான் வரத்தினால் பெற்ற நாகபாசமும் பாசுபதமும் எனக்கு உதவாது போயின் உணவு உண்பதையே உவந்து விட்டுவிடுவேன்'.

*"மருந்தே நிகர் எம்பிதன் ஆர்உயிர் வவ்வினானை*
*விருந்தே என அந்தகற்கு ஈகிலென் வில்லும் ஏந்தி*
*பொரும் தேவர் குழாம் நகை செய்திடப் போந்துபாரின்*
*இருந்தேன் எனின், நான் அவ் இராவணி அல்லென்"* (8014).

என வஞ்சினம் கூறினான்.

இந்திரசித்துவுக்கும்–இலக்குவனுக்குமிடையே நடந்த போரில் இந்திரசித்து தோற்றான். தோற்ற இந்திரசித்து இராவணனிடம் சென்று சீதையை விடுதலை செய்து பிழைத்துக் கொள்ளுமாறு கூறினான். இராவணன் அவனிடம் 'நான் யாரையும் நம்பவில்லை' என்கின்றான்.

> ***"என்னை நோக்கி யான் இந்நெடும்பகை***
> ***தேடிக் கொண்டேன்"*** (கம்பரா.பா.எண்.9123).

என்கின்றான். சாதல் உறுதியானால் இராமன் புகழ் உள்ளவும் தன் புகழ் நிற்கும் என்கின்றான் இராவணன். இராமனுடன் போரிட்டான் எனினும் புகழ் விரும்பி இராவணன் போரிடுகின்றான். இறுதியாக இந்திரசித்தும் இலக்குவனால் கொல்லப்படுகின்றான். இந்திரசித்தின் மரணம் இராமனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. இராமன் சீதையை மீட்டு விட்டதாகவே நம்புகின்றான். இந்திரசித்தின் மரணத்தால் இராவணனும் மண்டோதரியும் அழுது புலம்புகின்றனர்.

**மூலபலப்படை :**

இந்நிலையில் *வன்னி* என்னும் ஓர் அரக்கன் தோன்றுகின்றான். அவன் இனி சீதையை இராமனிடம் சேர்த்தாலும், இராம இலக்குமணர்கள் நம்மைக் கொல்லாமல் விடப் போவதில்லை. ஆதலால் மூலபலப்படை உட்பட அனைத்து அரக்கர் படைகளையும் திரட்டி, இராம–இலக்குமணர்களையும், வானரப் படைகளையும் அழிப்பதே நம் கடமை என்கின்றான்.

இராவணனின் மூலப்பலப்படையைக் கண்டு வானர வீரர்கள் அஞ்சி ஓடுகின்றனர். அப்போது வானரர்கள் *'மனிதர் ஆளின் என், இராக்கதர் ஆளின் என் வையம்'* என்கின்றனர். நாட்டில் அறநெறியும் பண்பும் அமைதியும் நிலவ நல்லாட்சி தேவை என்பதை அன்று வானரர்கள் உணரவில்லை. இன்று மக்கள் உணரவில்லை. இராமன் போர்க்களத்தில் அரக்கர்களை அழித்தான்; அரக்கர் குலமே அழிந்தது எனக் குறிப்பிட வந்த கம்பன் 'நீதிமன்றத்தில் பொய்ச்சாட்சி சொன்னவர் குலம் போல அழிந்தது', 'வறுமையில் துன்பப்பட்டு இறப்போரைப் போல இறந்தனர்' என்கின்றான்.

**இலக்குவன் வேலேற்றல் :**

இராமன் மீது இராவணன் ஏவிய வேலை ஏற்க விபீடணன், சுக்கிரீவன், அனுமன், அங்கதன், இலக்குவன் ஆகியோரிடையே போட்டி ஏற்படுகின்றது. அவர்களுள் இலக்குவனே முந்தி தன் மார்பில் வேலை ஏற்கின்றான்; இதனால் மூர்ச்சையடைந்த இலக்குவன், அனுமன் கொண்டு வந்த மருந்தால் மறுமுறையும் உயிர் பிழைக்கின்றான். இந்தப் போரின் முடிவில் இராம–இலக்குமணர்களுக்கும் வானரர்களுக்கும் *'அறம் வெல்லும், பாவம் தோற்கும்'* என்னும் தெளிவு பிறக்கின்றது.

*அடுத்த இதழில் தொடரும்*

# சங்கச் செய்திகள்

2.12.2016 அன்று நான்காம் தமிழ்ச் சங்க நிறுவனர் வள்ளல் பொன் பாண்டித்துரைத் தேவர் அவர்களின் நினைவுநாள் கொண்டாடப் பட்டது. தமிழ்ச் சங்கச் சாலையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு நான்காம் தமிழ்ச் சங்கச் செயலர் வழக்குரைஞர் திரு.ச.மாரியப்பமுரளி, செந்தமிழ் ஆசிரியர் திரு. இரா.சதாசிவம், மணியம்மை பள்ளித் தாளாளர் திரு.பி.வரதராஜன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் சங்க ஆட்சிக்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், செந்தமிழ்க் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப் பேராசிரியர்கள், நூலகர், அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

14 12.2016 அன்று மேனாள் சங்கச் செயலாளர், வழக்குரைஞர் என் எஸ்.முத்துமலைச்சாமி அறக்கட்டளையின் சார்பில் மேனாள் சங்கச் செயலாளர் நாவலர் ச.சோமசுந்தரபாரதியார் நினைவு நாள் சொற்பொழிவு முற்பகல் 10 30 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. நான்காம் தமிழ்ச் சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கினார். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் மேனாள் தமிழியல் துறைத் தலைவர் பேராசிரியர் தி.முருகரத்னம் நினைவுரை ஆற்றினார். பெரியார் மணியம்மை பல்கலைக்கழகத்தின் ஆங்கிலத்துறைப் பேராசிரியர் பழனி அரங்கசாமி அவர்கள் "சொற்களின் தோற்றமும் மறைவும்" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அவர் தனது உரையில், "தமிழ் மொழி இலக்கணப் பிரிவுகளான எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் வரிசையில் சொற்கள் வளர்ந்தன. ஆங்கிலத்தில் யாப்பு, அணிக்குத் தனி இலக்கணம் இல்லை சொற்கள் புழக்கத்தில் இல்லை எனில் அது மறைந்த சொல்லாகிவிடும். கடும்பறை ஒலியால் அசுணம் என்ற பறவை இறந்துவிடும் காலப்போக்கில் அந்தப் பறவை இனமே இறந்ததாக அறியப்படுகிறது. கைபேசிகளின் தாக்கத்தால் சிட்டுக்குருவி இனம் அழிகிறது. இது போன்றே சொற்களின் மறைவும் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்" செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் முனைவர் சு.விஜயன் அவர்கள் வரவேற்புரையும், துணைமுதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் நன்றியுரையும் வழங்கினர்

17.12.2016 அன்று முற்பகல் 10.30 மணியளவில் திருக்குறள் செம்மல் தெய்வத்திரு.ந மணிமொழியனார் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழா சங்க வளாகத்தில் நடைபெற்றது நான்காம் தமிழ்ச் சங்கச் செயலர் வழக்குரைஞர் ச.மாரியப்பமுரளி அவர்கள் இந்நிகழ்விற்குத் தலைமை தாங்கினார் சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள் படத்தினைத் திறந்து வைத்து நினைவுரை ஆற்றினார் மேலும் தியாகராசர் கல்லூரியின் மேனாள் முதல்வர் மு.அருணகிரி, யாதவர் கல்லூரியின் மேனாள் தமிழ்த் துறைத் தலைவர் இ.கி.ராமசாமி, சங்க ஆட்சிக்குழு உறுப்பினர் திரு க.சி.அகமுடைநம்பி ஆகியோர் நினைவுரை ஆற்றினர். செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் முனைவர் சு விஜயன் அவர்கள் வரவேற்புரையும், துணைமுதல்வர் முனைவர் கி.வேணுகா அவர்கள் நன்றியுரையும் வழங்கினர். இந்நிகழ்வில் தெய்வத்திரு. ந.மணிமொழியனார் அவர்களின் குடும்பத்தாரும், சங்க ஆட்சிக்குழு, பொதுக்குழு உறுப்பினர்களும், தமிழ் ஆர்வலர்களும் திரளாகக் கலந்து கொண்டனர்

**21.12.2016** அன்று நான்காம் தமிழ்ச்சங்க நிறுவனர் வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் அவர்களின் 150ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி முற்பகல் 10.30 மணியளவில் பாண்டியன் நூலகத்தில் நடைபெற்றது. "தமிழ் வழிக்கல்வி சாத்தியமா? சாத்தியம் இல்லையா?" என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும், "வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர் அவர்களின் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும்" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும் நடத்தப் பெற்றன. மதுரை மாநகரிலிருந்து 15க்கும் மேற்பட்ட கல்லூரிகளிலிருந்து எண்பதிற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர். பேச்சுப் போட்டியில் தியாகராசர் கல்லூரியின் இளங்கலை தமிழ் முதலாமாண்டு மாணவி *ரோ.லில்லிமலர்* முதல் இடமும், விவேகானந்தர் கல்லூரி இளம் அறிவியல் (இயற்பியல்) மாணவன் *பெ.பிரதீப்* இரண்டாம் இடமும், பாத்திமா கல்லூரியின் இளங்கலை தமிழ் மூன்றாமாண்டு மாணவி *சு.விஷ்ணு பிரியா* மூன்றாம் இடமும் பிடித்தனர். கட்டுரைப் போர்டடியில் மதுரைக் கல்லூரியின் முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி *ஜெ.அருணா* முதல் இடமும், செந்தாமரைக் கல்லூரி இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு மாணவி *இ.இருள்சக்தி* இரண்டாம் இடமும், மதுரை காமராசர் பல்கலைக்கழக திருமங்கலம் உறுப்புக்கல்லூரி இளம்அறிவியல் (கணிதம்) மாணவி *சு.பவித்ரா* மூன்றாம் இடமும் பிடித்தனர்.

**26.12.2016** அன்று பா.வே.மாணிக்க நாயக்கர் அவர்களின் நினைவேந்தல் முற்பகல் 11 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. இளம் இலக்கியம் மூன்றாமாண்டு மாணவி பொன்.அமிர்தவள்ளி தமது உரையில் "பா.வே.மாணிக்கனார் அறிவியல் தமிழ் வளர்த்த பேரறிஞர். பொறியாளராக இருந்தபோதிலும் தமிழின்பால் கொண்ட தளராக் காதலினால் நூல்கள் எழுதித் தமிழை வளப்படுத்தியுள்ளார். மண்ணில் கலந்தாலும் மாணிக்கம் தன்னொளி குன்றாது, காற்றில் கலந்தாலும் கவின்மலர் தன்மணம் மாறாது" என்று குறிப்பிட்டார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர், துணைமுதல்வர், உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். முன்னதாக பா.வே.மாணிக்கநாயக்கர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**27.12.2016** அன்று நான்காம் தமிழ்ச்சங்கம் சார்பில் முகவை மன்னர் பாஸ்கர சேதுபதி அவர்களின் 113வது நினைவேந்தல் நிகழ்ச்சி மற்றும் புதிய அறக்கட்டளை துவக்க விழா, முற்பகல் 10.30 மணியளவில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. நான்காம் தமிழ்ச்சங்கத் தலைவர் மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி அவர்கள் தலைமை வகித்தார். செந்தமிழ் கலை மற்றும் கீழ்திசைக் கல்லூரிச் செயலாளர் இராணி ந.லட்சுமி குமரன் சேதுபதி அவர்களும், நான்காம் தமிழ்ச்சங்கச் செயலாளர் வழக்குரைஞர் திருமிகு. ச.மாரியப்பமுரளி அவர்களும் முன்னிலை வகித்தனர். கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஜி.வள்ளி அவர்கள் தமிழறிஞர் தமிழண்ணல் அவர்கள் குடும்பத்தாரால் ஏற்படுத்தப்பட்ட "தமிழண்ணல் வளர் தமிழ் அறக்கட்டளை"யைத் துவக்கி வைத்துச் சிறப்புரை ஆற்றினார். அவர் தமது உரையில் "தமிழ்மொழி உயர்தனிச்

செம்மொழியாக உலக மொழிகளுக் கெல்லாம் முதன்மை மொழியாகத் திகழ்கிறது. உலகமொழிகளிலே தனிச்சிறப்புடைய மேன்மையான மொழியாக உள்ள தமிழைக்காத்த பெருமைக்குரியவர்கள் சேதுபதி மன்னர்கள் மதுரையில் தமிழ்ச் சங்கத்தை அமைத்தவர் பாண்டித்துரைத்தேவர். அதற்குக் காரணமாக இருந்தவர் பாஸ்கர சேதுபதி தமிழோடு ஆன்மீகத்தையும் வளர்த்தவர்கள் சேதுபதி மன்னர்கள். அவர்கள் தங்களுக்குக் கிடைத்த சிகாகோ சொற் பொழிவுக்கான வாய்ப்பை சுவாமி விவேகானந்தருக்கு வழங்கியதன் மூலம் ஆன்மீகத்தை உலக அளவில் பரப்பியுள்ளனர். முல்லைப் பெரியாறு அணை அமைய ஆரம்பத்தில் வரைவுத் திட்டத்தைத் தயாரித்தும், அதைக் கட்டப் பொருளுதவி வழங்கியும் செயல்பட்டவர்கள் சேதுபதி மன்னர்கள்'' என்றார். சிவகங்கை மன்னர் துரைசிங்கம் அரசு கலைக் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ம பெ.சீனிவாசன் முகவை மன்னர் பாஸ்கர சேதுபதி குறித்த நினைவுரை ஆற்றினார். முன்னதாக மதுரை நான்காம் தமிழ்ச்சங்க நிறுவனர் வள்ளல் பொன் பாண்டித்துரைத் தேவர் அவர்களின் 150ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 21.12.2016 அன்று செந்தமிழ் கலை மற்றும் கீழ்திசைக் கல்லூரியில் நடைபெற்ற அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்கிடையேயான பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பேச்சுப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் முதலிடம் வகித்தவர் களுக்குத் தலா ரூ 5005ம் (ஐயாயிரத்து ஐந்து) இரண்டாமிடம் வகித்தவர் களுக்குத் தலா ரூ 3003ம் (மூவாயிரத்து மூன்று), மூன்றாமிடம் வகித்தவர் களுக்குத் தலா ரூ.2002ம் (இரண்டாயிரத்து இரண்டு) ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. இத்துடன் போட்டியில் பங்கேற்ற அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் முனைவர் *சு.விஜயன்* அவர்கள் வரவேற்புரையும் துணைமுதல்வர் முனைவர் *கி.வேணுகா* அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர் இந்நிகழ்வில் சங்க ஆட்சிக்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், புரட்சிக்கவிஞர் மன்றத்தலைவர் *பி.வரதராஜன்,* பேராசிரியர் *உல.பாலசுப்பிரமணி,* தமிழ் ஆர்வலர்கள், செந்தமிழ்க் கல்லூரி உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

29 12 2016 அன்று தமிழறிஞர் தமிழண்ணல் வளர் தமிழ் அறக்கட்டளைச் சொற்பொழிவு முற்பகல் 10மணியளவில் நான்காம் தமிழ்ச் சங்கத்தின் செயலாளர் வழக்குரைஞர் திருமிகு.*ச.மாரியப்பமுரளி* அவர்கள் தலைமையில் சங்க வளாகத்தில் நடைபெற்றது. மதுரை டோக் பெருமாட்டி கல்லூரியின் மேனாள் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் சேதுமணியன் அவர்கள் "தமிழண்ணலும் தமிழும்" என்ற தலைப்பில் சொற்பொழி வாற்றினார். அவர் தமது உரையில் "தமிழண்ணல் ஓர் தமிழ்ப் போராளி, கருத்து வேறுபாடுகளைக் கடந்து அவரது எழுத்து அனைவரையும் ஈர்க்கக் கூடியது" என்று கூறினார். தமிழண்ணலின் படைப்புகள் குறித்து விவரித்துப் பேசினார் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர் முனைவர் *சு.விஜயன்* அவர்கள் வரவேற்புரையும் துணைமுதல்வர் முனைவர் *கி.வேணுகா* அவர்கள் நன்றியுரையும் ஆற்றினர். இந்நிகழ்வில் செந்தமிழ்க் கல்லூரி உதவிப்பேராசிரியர்கள், நூலகர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## பிப்ரவரி திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்


மகாவித்துவான்
மீனாட்சி சுந்தரம் பிள்ளை
( பிப் 1 – 1876 )


நா.வானமாமலை
( பிப் 2 – 2006 )


மு.இராகவையங்கார்
( பிப் 2 – 1960 )


அறிஞர் அண்ணா
( பிப் 3 – 1969 )


எச்.ஏ.கிருட்டிணப் பிள்ளை
( பிப் 3 – 1900 )


வீரமாமுனிவர்
( பிப் 4 – 1747 )


ஜி.யு.போப்
( பிப் 12 – 1908 )


செய்குதம்பிப் பாவலர்
( பிப் 13 – 1950 )


ச.வையாபுரிப் பிள்ளை
( பிப் 17 – 1956 )


வை.மு.கோதைநாயகி அம்மாள்
( பிப் 20 – 1960 )


பதிப்பாசிரியர் : **பேரா. இரா.சதாசிவம்**

**ஆசிரியர் குழு**

முதுமுனைவர் திரு. **இரா.இளங்குமரனார்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **இராமசுந்தரம்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **செ.கந்தசாமி**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **முருகரத்தனம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5507/56 DECEMBER 2016 TN/MA/130/2017-19
Posted at Madurai BPC on 25th of Every Month

# செந்தமிழ்க் கல்லூரி



## நான்காம் தமிழ்ச்சங்கம், மதுரை

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச்சங்கம் சாலை, மதுரை - 625 001. ☎0452 - 2343707 நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.லிட்., பி.ஏ., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வு பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புகள் உள்ளன**

முனைவர் **சு.விஜயன்**
முதல்வர் (பொ.), செந்தமிழ்க் கல்லூரி

**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி**
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
**செயலாளர்,**
நான்காம் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கச் சாலை,
மதுரை – 625 001. தமிழ்நாடு.

From
**THE SECRETARY,**
The Fourth Tamil Sangam,
54, Tamil Sangam Road,
Madurai - 625 001. Tamilnadu.

பெறுநர் / To,

**Book Post**

வெளியிடுபவர் : **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L., செயலாளர்
54, தமிழ்ச் சங்கச் சாலை, மதுரை – 625 001. 0452 – 2343707
பதிப்பாசிரியர் : **இரா.சதாசிவம்** 2/861, இராசராசன் தெரு,
மதுரை – 625 020. அலைபேசி : 94874 45403
அச்சிட்டோர் : **ஸ்ரீ பிரிண்டர்ஸ்** 147, கீழவெளி வீதி, மதுரை–1. அலைபேசி : 97894 95738